


தொகுதி - 9 பகுதி - 7

சித்திரை - 1 14-4-87

சிவ சிவ

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன்று உண்டு — பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

மற்றவர்களால் தனக்குப்பெருமதிப்பு வருதலை விரும்புகின்ற ஒருவன், எப்பொழுதும் மறக்காமல் கடைப்பிடித்தொழுக வேண்டிய காரியம் ஒன்று உள்ளது. அது யாது எனில், மற்றவர்களின் சிறப்புக்களை எல்லாம் பலரும் அறியும்படி எடுத்துரைத்து, அவரது குற்றங்களை வெளியே கூறுமல் தன்னுள்ளே அடக்கி வைத்து, எல்லாரிடத்தும் அடக்கமான சொற்களைச் சொல்லுதலாகும்.

# ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்**
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்

சிறப்பாசிரியர்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணசலம்
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1. பெருமான் புகழ்
2. விடையரங்கம்
3. இது குதர்க்கமில்லை
4. சிவலோகமாவதும் தில்லைச்சிற்றம்பலமே
5. சிதம்பர மும்மணிக்கோவை
6. பெரிய நாயகிமாலை
7. ஆலயபூஜைப் படிக்காசுநிதி
8. பெரிய புராணத்தில்பரிசு
9. அம்மானையின் தோற்றம்
10. அங்கதம்
11. தினை விதைத்தவன்
12. நூல் நிறை
13. இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்
14. **ஞானமிர்தம்**

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்



# பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்

'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ

## காசிவாசி முத்துக்குமாரஸ்வாமித்தம்பிரான் ஸ்வாமிகள் அவர்கள்

வாழ்க்கை நிம்மதியாக அமைய வேண்டும். செல்வம் நிறைந்த வாழ்க்கையை நிம்மதியான வாழ்க்கை என்று சொல்ல முடியாது. கல்விநிறைந்த வாழ்க்கையும் சில நேரங்களில் சர்ச்சைகள் சஞ்சலங்களை உண்டாக்கி அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடும்.

மனைவி மக்கள் விரும்பத்தக்க வகையில் அமைதல், நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் ஏவலாளர்கள் அமைதல், அறங்காக்கும் அரசன் அமைதல் – இந்த அமைப்பில் வாழ்க்கை கிடைக்குமானால் நிம்மதி கிடைக்கும். யாண்டுபலவாக என்ற புறநானூற்றுப் பாடலால் இவ்வுண்மையை அறிகிறோம். இன்னொரு முறையில் சிந்தித்துப் பார்த்தால் நோயற்றவாழ்க்கை, பகையற்ற வாழ்க்கையே நிம்மதி என உணரலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, விவாதத்திற்கு இடமின்றி நிம்மதிக்கு வழிஎது என்று சொல்லவேண்டு மானால்,

மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்.

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள், "பகைவனிடம் தாழாமல் கம்பீரமாக வாழும் நிம்மதிவாழ்வு ஸ்ரீமந் நடராஜப் பெருமானை வழிபட்டவர்க்கே கிடைக்கிறது" என்று சிதம்பரச் செய்யுட்கோவை 20ஆம் பாடலுள் அறிவிக்கிருர்

பகை இருவகைப்படும் அவை உட்பகை புறப்பகை என்பன ஆகும். உட்பகை நோய்செய்யும் என்று வள்ளுவரும் குறிப்பிட்டுள்ளார்.

நோய் அமைதியைக் குலைக்கும் விதத்திற்கும், பகை அமைதியைக் குலைக்கும் விதத்திற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. நோய்வந்தவர்களைப் பார்த்து மற்றவர்கள் அநுதாபப் படுவார்கள்; ஆறுதல் கூறுவார்கள். துன்பம் சற்றுக் குறைவாகத் தெரியும், பகை கொண்டவனைப் பார்த்து நேரில் யாரும் அநுதாபமோ ஆறுதலோ சொல்வதில்லை. மாருக உசுப்பிவிட்டு வேடிக்கை பார்ப்பார்கள். இவ்வகையில் சிந்திக்கும் போது அமைதியைக் குலைப்பவற்றுள் பகையே கொடூரமானது என உணரலாம்.

"உறுபகையும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்ற வள்ளுவர் கூற்றையும் இத்துடன் இணைத்துச் சிந்திக்கவேண்டும். வாழ்த்தும்போது,

"பசியும் பிணியும் பகையும் இன்றி
வசியும் வளனும் சுரக்க".

என வாழ்த்தும் முறைமையும் இக்கருத்துப் பற்றியே ஆகும். மானபங்கங்களுள் பெரியது பகைவரிடம் பிடிபட்டுத் தண்டனை பெறுவதேயாகும். சங்கத் தமிழும்

பெரும்பாலும் போர்க்களமாகவே நமக்குக் காட்சி தருகிறது. பழந்தமிழ் மன்னர்களிடம் "பகைவனுக்குத் தாழ்ந்து விடக்கூடாது" என்ற மான உணர்வே மேலோங்கியிருந்தது. அதனாலேயே மன்னர்களின் ஆட்சிக் காலங்கள் பெரும்பாலும் போர்க்களத்திலேயே கழிந்தன.

சோழன் செங்கணானால் சிறைப்பட்டான் சேரன் கணைக்காலிரும்பொறை. குடவாயிற் கோட்டம் என்னும் சிறையுள் வைக்கப்பட்டான் இந்தப் பெரிய அவமானத்தைத் தாங்கமாட்டாமல் "குழவி இறப்பினும்" என்றபாடலை எழுதிவைத்துவிட்டுத் தற்கொலை செய்துகொண்டான் அவன் எழுதிய பாடல் அர்த்த புஷ்டியானது. அதிலே பகைவர் என்பதைக் "கேளல் கேளிர்" என்று நையாண்டி செய்கிறான். பகைவர்போடும் சோற்றை "வேளாண் சிறுபதம்" என்று கேலிபேசுகிறான். உண்மையான மானஸ்தன் சேரமான் கணைக்காலிரும் பொறை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஓதாதுணர்ந்த பெரு ஞானியார் ஆவார். அவர்கள் சேரமான் கணைக்காலிரும் பொறையின் வரலாற்றை மனத்துட் கொண்டே அமைதியின்மை என்பது "பகையிடம் விலங்கு பெறுதல்" என்கிறார்கள்.

கருந்தாது கொல்லும் கருங்கைத்திண் கொல்லர்
வருந்தா தியன்றதொரு வல்விலங்கு பூண்டு
திருந்தாதார் முன்றில்தொறும் சென்றுசிலர் தூங்க

என்ற முன்மூன்று அடிகளின் நயங்களை முதலில் சிந்திப்போம்.

கருந்தாது என்பது இரும்பு, இரும்புவேலை செய்பவர்கள் இரும்பைப் பழுக்கவைத்து அடிப்பார்கள். இதனால் இரும்பு வருத்தப்படப் போவதில்லை எனினும் ஸ்ரீ சுவாமிகளின் அருளுள்ளம் அச்செயலைக் "கொலை"

என்று சொல்கிறது. கருந்தாது கொல்லும் என்பதனுடன் மேலும் இரண்டு பெரியவர்களின் தொடர்களை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். வள்ளலார் பயிர்கள் வாடுதலைப் பார்த்து வருந்திப் பாடுகிறார். வலைகளைப் பார்த்து இதனால் எத்தனை மீன்கள் அழியுமோ என வருந்திப் பாடுகிறார்.

அத்தனை உணர்வுகளையும் "கொல்லும்" என்ற ஒரே வார்த்தையில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அருளியுள்ளார்கள். இந்த ஒரு சொல்லின் விளக்கமே வள்ளலாரின் விண்ணப்பங்கள் என்று கூறலாம். ஔவையார் "மரம் கொல்தச்சன் கைவல் சிறுஅர்" என்னும் போது 'கொல்' என்பது வருகிறது. அதில் ஸ்ரீ சுவாமிகள் கூறுமாப் போலே அருள் இல்லை. காரணம் மரத்தை வெட்டுதல் என்பது ஓர் உயிரைக் கொல்லுதலே ஆகும். பட்டுப் போன மரத்தைச் 'செத்தது' என்றும் மறு தளிர்விடும் மரத்தை "பிழைத்தது" என்றும் கூறும் வழக்குகளும் அதற்குச் சான்றாகும்.

அடுத்து இரும்பு வேலை செய்யும் அக்கொல்லர்களைக் "கருங்கைத் திண் கொல்லர்" என்கிறார். நெருப்புடனும் இரும்புடனும் ஊடாடும் கரங்கள் அப்படித்தான் இருக்கும். உடல் நிறம் வேறாயினும் கையின் நிறம் கருப்பாகவே இருக்கும் என்பது குறிப்பு. அல்லது, கருங்கை என்பதற்கு வலிமை வாய்ந்த கை என்று பொருள் கொள்ளினும் அமையும்.

இந்த இரும்புக் கொல்லர்கள் விலங்கு செய்கிறார்கள். விலங்கு இரு வகையில் செய்வர். கை விலங்கு கால் விலங்கு உடல் விலங்கு என்பது வெறும் சங்கிலிகளே ஆகும். குற்றவாளிகளை அவர்களின் குற்றங்களுக்குத் தகுந்தாற் போல விலங்குகளை மாட்டி இழுத்துச் செல்வர். விலங்கு மாட்டுவது குற்றவாளி தப்பித்து ஓடாமல் இருப்பதற்கு மட்டுமன்று; அவனை மனிதனாக மதிக்கவில்லை விலங்காக மதிக்கிறோம் என்பதைக்

காட்டுவதற்கும் ஆகும்· நாற்று முடியை நினைவுகூரப் பொன்னல் அரசன் முடி வைத்துக் கொள்வது போன்ற தொரு வழக்காகும் இது.

இரும்பில் விலங்கு செய்யும் போது அதைச் செய்பவன் "இது யார்யாருக்கு மாட்டப் பெறப் போகிறதோ" என்று நினைப்பது கிடையாது. 'இது மாட்டப் பெறுபவர்கள் மனம் என்னென்ன பாடுபடுமோ?' என்று நினைப்பதும் கிடையாது. எனவேதான் ஸ்ரீ சுவாமிகள் 'வருந்தாது இயன்றதொரு வல் விலங்கு' என்கிருர்கள்.

அதற்கடுத்து இப்பாடல் அறிவிக்கும் செய்தி மிகவும் ருசியானது. பகைவர்களின் முன்றில்களில் சிலர் கை விலங்கு அல்லது கால் விலங்கு மாட்டப் பெற்று நிற் கிருர்கள் இதனை 'திருந்தாதார் முன்றில் தொறும் சென்று சிலர் தூங்க' என்ருர். இது வார்த்தைக்கு வார்த்தை அழுத்தமுள்ள தொடராகும். திருந்தாதார் எனப் பகை வர்களைக் குறித்தமையால் இவ்வாறு பிறரை இம்சிப்பதை ஸ்ரீ சுவாமிகள் உடன்படவில்லை என்பதைப் புலப் படுத்துகிருர்கள். அவர்கள் திருந்த வேண்டும் என்பது கருத்து. முன்றில் தொறும் என்பது அவமானம் படுத்துதலைக் காட்டுகிறது. தூங்க என்பது செயலொடுங்கி நிற்ப என்னும் பொருளில் கூறப் பெற்றது. இது ஓர் அபூர்வ சொல்லாட்சி.

இவ்வளவு இன்னல்களும் அடைபவர்கள் நடராஜப் பெருமானைத் தொழாதவர்கள், தொழுதவர்கள் இந்த இன்னல்களை அடையாமல் களிதூங்கி இருப்பார்கள்.

> இருந்தேம் களிதூங்கி யாமேமற் றம்ம
> அருந்தாது அலர்தில்லை அம்பலத்தில் தூங்கும்
> பெருந்தேன் முகந்துண்ணப் பெற்று.

என்பது ஸ்ரீ சுவாமிகளின் வாக்கு. திருவள்ளுவர்,

> அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானே டூர்ந்தா னிடை

என்ருர். அதில் சிவிகை தூக்குபவன் தருமம் செய்யாதவன் என வருகிறது அதேபோல் விலங்கு பூட்டப் பெற்றவன் நடராஜப் பெருமாஇன வழிபடாதவன் என்று கூறிய சுவாமிகள் ',விலங்கு பூட்டியவன் வழிப்ட்டவன் என்று கூறவில்லை. ஏனெனில் வள்ளுவர் குறளுக்குத் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் சற்று வேறுபாடு கண்டார்கள் அவர்தாமியற்றிய நால்வர் நான்மணிமாலையுள்,

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடையை - மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பொறுத்தார் மற்
றுந்தம் சிவிகையிஇன ஊர்ந்து

என்று சுவையான மறுப்புக் கூறியுள்ளார். எனவே விலங்கு ஏற்றல் பாபம் என்பது சரி. பூட்டல் புண்ணியம் எனக் கொள்ளலாகாது நுணுக்கங்களைப் பற்றி ஸ்ரீ குமரகுருபரர் சுவாமிகள் அருளிய பாடலின் முழு வடிவையும் காண்போம்.

கருந்தாது கொல்லும் கருங்கைத்தின் கொல்லர்
வருந்தாது இயன்றதொரு லவ்விலங்கு பூண்டு
திருந்தாதார் முன்றில்தொறும் சென்றுசிலர் தூங்க
இருந்தேம் களிதூங்கி யாமேமற் றம்ம
அருந்தா தலர்தில்லை அம்பலத்தில் தூங்கும்
பெருந்தேன் முகந்துண்ணப் பெற்று.

என்பது அத்திருப்பாடல். இப்பாடலின் கீழ்

"இஃது ஒருவிகற்பத்து ஆறடிப் பஃறொடை
வெண்பா" என்ற செய்யுள் இலக்கணக்
குறிப்புக் காணப் பெறுகிறது.

அடிதோறும் இரண்டாமெழுத்து "ரு" என வருவதால் ஒருவிகற்பம் வெண்பா இலக்கணங்கள் பொருந்திப் பல அடிகளான் வருதலால் பஃறொடை வெண்பா.

**சிவ சிவ.**

# இது சூதர்க்கமில்லை

பொன்மயமான
உலகத்தைப்
பார்க்கப் போகுமுன்
இந்த
இரும்பு உலகத்தைச்
சுவீகரித்துக் கொள்ளுங்கள்

மனிதனுக்கு
அபார ஆசை!
பாதைபடுத்திருக்க
கைகாட்டி நின்றிருக்க
இவன் நடக்கும் போது
இவனுடன்
கைகாட்டியும்
வரவேண்டுமாம்!

பிரதிபிம்பங்கள்
எதுவும்
பிம்பத்தைப் பற்றிக்
கவலைப் பட்டதே
இல்லை!

இதிலே ஒரு
சூது இருக்கிறது!

சுவாரஸ்யங்களை
மட்டும்
தேடும்
எல்லா நேரங்களிலும்
அது
யாரையும் பிடிக்காமல்
"தபஸ்" செய்கிறது!

எதிருக்கு வரமுடியாத
சுயம்
எதிர் வைத்து
பேச வைத்து
எல்லாரையும்
முட்டாளாக்குகிறது!

இதிலும் ஒரு
சூது இருக்கிறது!

நிர்த்தாரணம்
ஒன்றாகத்தானே
இருக்க முடியும்!
நிதானம் மட்டுமே
அதைத் தெரிசிக்கும்
என்பது பொய்!

சூட்சமத்தைச்
சூட்சமம் பிடிப்பது
தர்க்கம்!
அதிர்ஷ்டமும்
லாவகமாக
எட்டிப்பிடிக்கிறது!

இதுசூதர்க்கமில்லை

—மு. வே. பசுபதி

**வினா: 25** தெய்வ வடிவங்களைக் குறிக்கும் போது பிரமதேவனுக்கு நான்கு தலையும் எட்டுக்கைகளும் பேசப்படுகின்றன. முருகனுக்கு ஆறுதலைகளும் பன்னிரு கரங்களும்பேசப்படுகின்றன. ஆனால் அத் தெய்வங்களுக்குக் கால்கள் மட்டும் இரண்டு என்று பேசப்படுகின்றன. இது ஏன்?

— திரு சொ. பாக்கியம் பிள்ளை ஸ்ரீவைகுண்டம்

**விடை:** பிரமதேவன் நான்கு திசைகளையும் நோக்கி நான்கு வேதங்களையும் ஒரே சமயத்தில் ஓதுகிறபடியால் அவனுக்கு நான்கு முகங்கள் (நான்கு தலைகள்) பேசப்படுகின்றன. நான்கு முகங்களுக்கு ஏற்பச் செயலாற்றலும் அதிகம் என்பதைக் காட்ட எட்டுக் கைகள் பேசப்படுகின்றன. நான்கு பக்கத் திசைகளோடு மேல்நோக்கு திசை கீழ்நோக்கு திசைகளையும் கூட்டி வருகிற ஆறு திசைகளிலும் முருகப் பெருமானின் திருவருட் கடாட்சம் செல்கிறபடியால் முருகனுக்கு ஆறுமுகங்களும் அதற்கேற்ப அளவிலாற்றலுடைமையைக் காட்ட பன்னிரு கரங்களும் பேசப்படுகின்றன. ஆனால் தெய்வங்களில் திருவடிகள் வீடுபேருகிய முத்திநிலையைக் குறிப்பதால் அவைமட்டும் இரண்டு என்றே பேசப்படுகின்றன.

பற்று விடுதலே வீடுபேறு. "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்று நம்மாழ்வாரும் கூறியுள்ளார். பற்ருனது அகப்பற்று புறப் பற்று என இருவகைப்படும். அகப்பற்று என்பது யான் யான் எனப் பேசும் அகங்காரம். புறப்பற்று என்பது எனது எனது எனப்பேசும் மமகாரம். இந்த யான், எனது பற்றுக்கள் அற்ற இடமே வீடு பேறு. 'யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" எனத் திருவள்ளுவர் அறிவிக்கிருர்.

இங்ஙனம் இரண்டு பற்றுகளையும் அறுத்துப் பெறத் தக்கதான வீடுபேறு எது என்னில் இறைவனது திருவடிகளான இடமேயாகும் இதனை ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பாவில் முருகப் பெருமானின் திருவடிகளைக் குறிக்கும்போது "யான் எனதென் றற்ற இடமே திருவடியா" என்று குறிப்பிட்டவதனல் அறியலாம்.

எல்லாப்பற்றுக்களும் இருவகையுள் அடங்கி விடுதலின் பற்றற்ற இடமும் இரண்டேயாகின்றன. அதுபற்றியே தெய்வங்களின் திருவடிகள் மட்டும் இரண்டுக்கு மேலாகக் கூறப்படாமல் இரண்டு என்று ஒரே மாதிரியாகப் பேசப்படுகின்றன.

# சிவலோகமாவதும் தில்லைச் சிற்றம்பலமே

[தொடர்ச்சி]

டாக்டர் T. B. சித்தலிங்கையா எம். ஏ. பிஎச். டி.,
பேராசிரியர்
சைவசித்தாந்தத் துறைத் தலைவர்
காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

சிற்றம்பலத்து உறையும் ஈசன் சிற்றம்பலத்தீசன் (255), என்றும் சிற்றம்பலவன் (217, 218, 220, 221, 222) என்றும் சிற்றம்பலத்தான் (246) என்றும் சுட்டப்படுகின்றான். சிற்றம்பலவர் என்று மரியாதையோடும் குறிக்கப்படுகிறான் ஆடல்வல்லான் (268 277).

இறைவன் ஆடும் ஐந்து சபைகளில் தில்லையம்பலம் கனக சபை அல்லவா? அது பொன்னம்பலம் என்றே கூறப்படுகிறது. அம்பொன்செய் அம்பலம் (6), பொன்னம்பலம் (9, 10), அணுக் கருக்கணிய செம்பொனம்பலம் (38) செம்பொன்செய் அம்பலம்(188) செம்பொனின் அம்பலம் (198, 190, 201), தில்லைச்செம் பொன், அம்பலம் (200) என்று அது வருணிக்கப்படுகிறது.

"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று திருத்தொண்டத்தொகை பாடுகிறது. தில்லைக்குப் பெருமை சேர்ப்பதில் அவர்களுக்கும் பங்குண்டல்லவா? அவர்களை மூவாயி வர் என்று குறிப்பிடுகிறார் கண்டராதித்தர் தம் திருவிசைப்பாவில் "கற்றுங் கேரியோம்பி" என்று சம்பந்தர் தேவாரம் குறிப்பிடுகிறது அவ்வாறே "ஓவாமுத்தீயஞ்சு வேள்வியாறங்க நான்மறையோர், ஆவே படுப்பார் அந்தணாளர் ஆகுதிவேட்டுயர்வார், மூவாயிரவர் (196) என்றும், முத்தீயாளர் நான்மறையர் மூவாயிரவர் நின்னொடு ஒத்தேவாழும் தன்மையாளர் (197) என்றும் தில்வாழந்தணர்தம் இயல்பையும் செயல்களையும் எடுத்துக்கூறுகிறது. இத்திருமுறை. அம்மூவாயிரவர் "ஓதிய நான்மறையைத் தெத்தே என்று வண்டு பாடும் தென்தில்லையம்பலத்துள் (197) இறைவன் ஆடுகின்றானாம்!

அந்த இறைவனைக் காணத் துடிக்கிறது. கண்டராதித்தர் திருவுள்ளம் "அந்த"ஆரமுதை எங்கள் கோவை என்று கொல் எய்துவதே" (195), கோவே உன்றன் கூத்துக்காணக் கூடுவ தென்று கொலோ"(196), "அத்தாவுன்றன் ஆடல்காண அணைவது மென்று சொலோ:" (197), கோனை ஞானக்கொழுந்து தன்னைக் கூடுவதென்று கொலோ;' (198), "ஒளிவான்சுடரே உன்னை நாயேன் உறுவதும் என்று கொலோ" (199), காரார்மிடற்றெங் கண்ட ணரைக் காண்பதும் என்று கொலோ" (200, 201), "எங்கோன் ஈசன் எம்மிறையையென்று கொல் எய்துவதே" (202) என்றெல் லாம் பாடித் தமது ஆற்ருமையை, ஆவலை, வெளிப்படுத்துகிருர் கண்டராதித்தர்.

சிவபிரானுக்கென்று தனியே ஒரு பெயரில்லை என்ருலும் அவனை ஆயிரம் பெயர் கொண்டு ஏத்துகிரும்[3] அவன் யோகமும் போகமுமாக இருக்கிருன். அதாவது மேற்கொள்ள வேண்டிய வழியாகவும் அடைய வேண்டிய குறிக்கோளாகவும் இருக்கிருன்' ஏனென்ருல் அவனைத் தவிர வேருென்றுமில்லை.[5] அவனே மூலமும் முடிவுமாக இருக்கிருன்[6]. அவனே "அல்லாய் பகலாய் அருவாய் உருவாய் ஆரா அமுதமாய்" (236) இருக்கிருன். அவனே தலைவன் புகலிடம்; மூச்சு என்கிருர் திருவாலியமுதனுர்[7]. சைவம் ஒன்றே தெய்வீக நெறி; அறிஞர்கள் சிவத்தைத் தவிர வேறு தெய்வத்தைக் கருதமாட்டார்கள் என்கிருர் சேந்தனுர் (50). சிவனடியார்களுடைய பெருமையைக் குறிப்பிட்டு, "திருவீழிமிழலையான் திருவடிநிழற்கீழ்ப் புக்கு நிற்பவர் தம் பொன்னடிக் கமலப் பொடியணிந்தடிமை பூண் டேனே (51 5ம) என்று தாம் பெற்ற பேற்றைக் குறிபபிடுகிருர்,

திருமாளிகைத்தேவர் தமது திருவிசைப்பாவில் இறையருளை விரிவாகப் பேசுகிருர். சிவனில் தன்னையிழந்து இருந்து விட்டால் தனக்கென்று தனியே ஒரு சிந்தனை ஏது! செயல் ஏது! பேச்சு ஏது? இந்த நிலையைத்தர வேண்டுமென்று இறைஞ்சுகின்ருர். "விளம்புமா விளம்பே", "பணியுமா பணியே", "கருதுமா கருதே" "உரைக்கு மாறுரையே", "நணுகுமா நணுகே:", "இசையுமாறி சையே", "நுகருமா நுகரே", "புணருமா புணரே" "தொடருமா தொடரே", "விரும்புமா விரும்பே", "நினையுமா நினையே"[8] என் றெல்லாம் அந்த நிலையை விளக்கிருர். சமயங்கள் ஏணிப்படி போல் அமைந்திருக்கின்றன என்றும் தாம் அப்படிவழி ஏறி இறைவனோடு கலந்ததாகவும், இவ்வெல்லா நிலைகளிலும் இறைவன் தன்னுடன் இருந்ததாகவும் அவ்விறைவன் வாழுமிடம் திருவிடை மருதூர் என்றும் கருவூர்த் தேவர் கூறுகிருர்[9]

முதலும் முடிவும் இல்லாத ஈசனுக்குப் பல்லாண்டு கூறுகிருர். சேந்தனர். ''வாழ்த்துவதும் வானோர்கள் தாம்வாழ்வான் வேண்டி', என்பது திருமறை. உலகெலாம் வாழ, இறைவனுக்கு வாழ்த்தும் பல்லாண்டும் கூறுகிருர் இவ்வடியார். ''பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த பித்தன் (289), ''பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் (290) என்னைத் தன்பாற் படுத்தான்'' (291), ''பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கன்'' (293), ''பாவிக்கும் பாவிகத்தப் புறத்தான்'' (294), ''பாலும் அமுதமும் ஒத்து நின்ருன்'' (296) ''நட்டம் பயில வல்லான்'' (297), ''எம்மான்'' (299), ''பந்தம் பிரியப் பரிந்தவன்'' (301) என்றெல்லாம் பாராட்டிப் போற்றிப் பல்லாண்டு பாடுகிருர். அவனுக்கு அது தேவையில்லை. அவன்தான் எல்லாம் கடந்தவன் ஆயிற்றே! ''பல்லாண்டென்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுவதுமே'' (292) என்று அவரே அதனை விளக்குகிருர்.

முழுமுதற் பொருளாய் இறைவன் ஐந்தொழிலியற்றத் தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடுகின்ருன். சிவன் வாழுமிடம் சிவலோகமேயல்லவா! ஆகவே, ''சிவலோகமாதுவும் தில்லைச் சிற்றம்பலமே!

மன்னுக தில்லை! வளர்க நம் பத்தர்கள்

---

3. பேர்கள் ஆயிரம் ஆயிரம் பிதற்றி — 21
4. உறவாகிய யோகமும் போகமுமாய் — 25
5. யோக நாயகனையன்றி மற்றென்றும் உண்டென உணர்கிலேன் - சேந்தனர் — 46
6. மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய் - கருவூர்த்தேவர் 121
7. இறைவனை என்கதியை என்னுளே உயிர்ப்பாகி நின்ற மறைவனை — 251
8. திருவிசைப்பா - 1—11.
9. பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவல் படிவழி சென்று சென்றேறி சிந்தையும் தானும் கலந்தோர் கலவி தெரியினும் தெரிவுரு வண்ணம் ....... மருவிடம் திருவிடைமருதே — 177.

# சிதம்பர மும்மணிக்கோவை

தொடர்ச்சி

டாக்டர். கோமதி சூரியமூர்த்தி,
விரிவுரையாளர்,
காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

**கூத்தினை வழிபட்டார் பெறும் பேறு:**

அம்பலக் கூத்தனின் ஆனந்த நடனத்தைத் தரிசிப்போர் துன்பம் தரும் பிறவியிலிருந்து விடுபடுபவர் *(2: 69 — 71)* இவ்வுண்மையை மற்றோர் பாடலில் குமரகுருபரர் எம்பெருமானிடம் தமக்கு அருள்புரிய வேண்டும் என்று இரங்கி வேண்டுவதன் மூலம் நயமாகப் புலப்படுத்துகின்றார், "நடராசப் பெருமானே! இதுகாறும் எவ்வளவோ பிறவியை நானடைந்து துன்புற்றேன் இனி வரும் பிறவிக்கு அஞ்சேன். ஆனால் உன் திருநடன தரிசனம் பெற்றும் ஒருவன் நற்கதி பெறவில்லையானால் வேதம் உண்மையைச் சொல்லவில்லையோ எனத் தேவர்கள் அஞ்சுவர் அங்ஙனம் அஞ்சாமவிருத்தற்கேனும் எனக்கு அருள்புரிக" என வேண்டுகிறார். *(20 : 15 — 28).*

மேலும் மற்றோர் பாடலில், "அடியேன் நின் திருக்கூத்தை ஒருகால் கும்பிட்ட மாத்திரத்தில் பரகதி பெறும் உரிமையுடையேனானேன். அறிந்தோ, அறியாமலோ ஒருவர் ஒரு மருந்தினை உண்டால் அஃது உண்டவர் இருவருக்குமே பலனைத் தருவதுபோலத் திருக்கூத்தின் தரிசனம் அடியேன் குறையுடையேனாயினும் தனக்கு நன்மையைத் தருதல் வேண்டும் என்று வேண்டுகிறார் *(2: 69— 83).*

திருக்கூத்தினைக் கண்டார் பெறும் பயனை மற்றோர் பாடலில் தெளிவாகக் கூறுகின்றார். தவம் செய்யும் தொண்டர்கள் சரியை, கிரியை, யோக நெறியில் நின்று ஞானம் பெற்றே வீடுபேறு அடைவர். அடியனோ இதொன்றிலும் நில்லாது அம்பலதரிசன மாத்திரத்திலேயே பிறவா நெறி பெற்றனன் எனக் கூறுகின்றார். *(5: 7 — 10).*

"சரியையிற் சரியாது கிரியையிற் றளரா
தியோகத் துணங்கா தொண்பொரு டுக்காது
வறிதே நின்றிரு மன்ற நோக்கிப்
பிறவா நன்னெறி பெற்றன னன்றே"

என்பது குமரகுருபரர் திருவாக்காகும்.

## தொண்டர்களைப் போற்றுதல்:

சைவசித்தாந்தம் குரு லிங்க சங்கம வழிபாட்டை வலியுறுத்தும் குருவின் ஆணையைச் சிவன் ஆணையாக ஏற்றுச் சிதம்பரம் சென்று தங்கியிருந்த காலத்தில் பாடிய இந்நூலில் நடராசப் பெருமானைப் போற்றுவதோடு சங்கமர்களையும் (அடியவர்கள் கூட்டம்) போற்றுகின்றார் குமரகுருபரர்.

"நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகா தனவே" *(11: 27 — 28).*

என்று தொண்டர் சிறப்பைக் கூறுகின்றார். அதனாலன்றோ தன்னை,

"ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக" *(8 : 33 — 34)*

இறைவனைவேண்டுகிறார்.

## சைவ சித்தாந்த நூற்புலமை:

இந்நூலில் பல இடங்களில் நாம் குமரகுருபரருடைய சைவ சித்தாந்த நூற்புலமையைக் காண்கின்றோம். ஆணவம் என்னும் மூலமலத்தோடு கட்டுண்ட உயிர் எப்படிச் சிறிது சிறிதாகப் பல வகைப் பிணைப்புகளைப் பெற்று முப்பத்தாறு தத்துவங்களோடு ஒன்றி வாழ்கின்றன என்பது மிக அழகாக உருவகம் செய்து ஒரு பாடலில் பாடியுள்ளார் ஆணவத்தை ஒரு சேரிப்பரத்தையாக உருவகஞ் செய்து உயிர் அவளைவிட்டும் பிரியாது மோகத்தில் அழுந்தியுள்ள தென்றும், அவளுடைய தங்கையர் இருவருள் குடிலை (சுத்த மாயை) என்னும் பெண் சுத்தவித்தை, ஈசுவரன், சாதாக்கியம், சக்தி, சிவமென்னும் ஐந்து புதல்வியரைப் பெற்றனள் என்றும், மோகினி என்பவள் காலம், நியதி, கலை என்ற மூன்று புதல்வியரைப் பெற்றனள் என்றும் கூறுகிறார். இவர்களுள் கலை என்னும் கணிகை வித்தை, அராகம், மான் என்ற மூவரைப் பெற்றனள். மான் எனப்பட்டவள் ஞானேந்திரியம் ஐந்து, அந்தக்

கரணம் நான்கு ஆகிய இருபத்து நான்கு பேர்களைப் பெற்றனள். இவ்வாறு குடிலை வழி வந்த ஐவரும், மோகினி வழிவந்த மூவரும், கலைவழி வந்த மூவரும், மான்வழி வந்த இருபத்து நால்வரும் என முப்பத்தைந்து பேர்களுடனும் இந்த ஆன்மா முறை பிறழ்ந்து முயங்குகின்றது என்று கூறுகின்றார். மேலும் இறைவனை நோக்கி வேண்டுகின்றார் இப்படிப்பட்ட ஆன்மாவுடன் ஞானவல்லி என்னும் பெண்ணை மணம் புரிவித்து, அறிய வேண்டிய அரிய பொருளை உணரும்படிச் செய்து, முக்திச்செல்வம் பெற்ற அன்பர்களோடு இறவா இன்ப வீட்டினில் மகிழ்ந்து கூடும்படி அருள்செய்ய வேண்டுகின்றார் தத்துவங்கள் வயப்பட்ட ஆன்மா அதிலிருந்து விடுபடவேண்டிய முறையை நயத்துடன் எடுத்துரைக்கின்றார் *(29: 23 — 45)*.

இறைவன் உயிர்களிடத்திலுள்ள சீவ போதத்தை நீக்கிச் சிவ போதம் அடையச் செய்தலை,

> "சென்றவரைத் தாமாக்கும் தில்லைச்சிற் றம்பலத்து
> மன்றவர்" *(21:)* எனக் குறிப்பிடுகின்றார்.

**நீதியுரைத்தல்:**

> "செல்வ மென்பது சிந்தையி னிறைவே" *(26:—20)*
> "அல்கா நல்குர வவாவெனப் படுமே" *(26:—21)*

என்று குமரகுருபரர் செல்வத்திற்கும் வறுமைக்கும் இலக்கணம் கூறுவது உலகியல் மாந்தர்கள் என்றும் தம் வாழ்வில் நினைவில் கொள்ள வேண்டிய பொன்மொழிகளாகும்.

**முடிவுரை:**

தில்லைப் பெருமானைப் போற்றும் இந்நூல் பல சித்தாந்தக் கருத்துக்களையும் எடுத்துரைக்கின்றது. குமரகுருபர சுவாமிகள் தம் கருத்துக்களை உவமை உருவகம், முதலிய அணி நயத்துடன் வெளிப் படுத்தும் இடங்களும் பலவாகும் பாடல்கள் கற்பனை நயம், பொருள்நயம், சொல்நயம் மிக்கவை. இந்நூல் சமயக்கண் கொண்டு காண்கின்றவர்கட்கு மட்டுமல்லாமல், இலக்கியக்கண் கொண்டு நோக்குவாருக்கும் படிக்குந்தோறும் என்றும் பேரின்பம் பயப்பதாகும்.

# ஸ்ரீமத் சண்முக சுவாமி அவர்களியற்றிய

# பனசைப் பெரியநாயகி மாலை

20353

நலமார் பனசை நகர்வாழ் பெரியநன் நாயகிமேல்
பலமார் தமிழினற் பாமாலை சூடப் பயோதரம்போல்
குலமா ரருளை அடியே னகத்திற் குறைவறப்பெய்
வலமார் சடையர் அருளாண்ட தும்பிலைய வாழ்த்துவனே.

நூல்

சங்கார் கரமும் திருவா ரூரமும் தாங்கியமால்
தங்கா யடியன் வினைதீர்த் தருளெழில் தாங்கும்வரை
மங்காய் மதிச்செஞ் சடையப்ப தேவன் மகிழ்ந்தணையும்
நங்காய் பனசை நகர்வாழ் பெரியநன் னாயகியே! 1

அன்றே ரிமைய வரைமக வாகி யமர்ந்தவருட்
குன்றே யடியன் வினைதீர்த் தருளெழிற் கூத்துகந்து
மன்றேய் பரமன் மகிழ்காம வல்லிமெய் மாதவர்சூழ்
நன்றேய் பனசை நகர்வாழ் பெரியநன் னாயகியே! 2

சந்தார் தடமுலைத் தாடகை சாத்துநற் சூரினைமுன்
இந்தார் மணிமுடி சாய்த்தணி யுஞ்சடை யீசன்மகிழ்
பந்தாம் எனுமுலைப் பாவாய் அடியன் பணியுகந்தாள்
நந்தார் பனசை நகர்வாழ் பெரியநன் னாயகியே! 3

நாரார் பனசை வலைதீர்ந் தடியர்கள் நற்கதியை
நாரார் பனசை மலர்தூய்த் தொழுதுமுன் நண்ணவருள்
நாரார் பனசை வலமா மெனுங்குழல் நங்கைமுன்வா
நாரார் பனசை நகர்வாழ் பெரியநன் னாயகியே! 4

கண்ணும் மணியும் மணியாடு பாவையும் காண்பகலும்
விண்ணும் புனலும்நல் வாயுவும் பாரும் மிளிர்அனலும்
பண்ணுண் பதியும்நல் ஆன்மாவும் ஆகிப் பரந்தென்முனம்
நண்ணும் பனசை நகர்வாழ் பெரியநன் னாயகியே! 5

புத்தூரும் வல்லம் புலியூரும் மாசடைப் புண்ணியனூர்
சித்தூரும் மாதவர் சேர்ந்தூர் கயிலைச் சிகரம்விட்டுப்
பித்தூர் அடியன் உளத்தூரில் வந்து பிறங்கியதேன்
நத்தூர் பனசை நகர்வாழ் பெரியநன் ஞயகியே. 6

மாடும் பொருளுநன் மக்களும் மாதரும் வாழ்மனையும்
தேடும் நிலமும் திரமல்ல என்றுனைத் தேர்ந்தவர்
பாடும் பரிசரிந் துன்பாத பங்கயம் பாடவருள்
நாடும் பனசை நகர்வாழ் பெரியநன் ஞயகியே!

கல்லா மனத்துக் கடையேனை யாண்டு! கருணைசெய
வல்லாயென் றுன்பதம் வந்தடைந் தேன்வினை மாற்றிடுவாய்
செல்லாங் குழல்மடீர்ச் செவ்வாய் வரைகுயச் சிற்றிடைசேர்
நல்லாய் பனசை நகர்வாழ் பெரியநன் ஞயகியே! 8

காட்டும் இரவியும் கண்ணையும் போலக் கலந்துயிரை
ஆட்டும் பரமன் அகத்தா மரையில் அழகொழுகத்
தீட்டும் உயிரினல் லோவியமே வினைதீ ரருளே
நாட்டும் பனசை நகர்வாழ் பெரியநன் ஞயகியே! 9

கதிவாழ்க வேதநல் லாகமம் வாழ்கநற் கண்மணியுன்
பதிவாழ்க சைவம் தருநீறும் வாழ்கநற் பாவலர்தம்
மதிவாழ்க அந்தணர் ஆனிரை வாழகநன் மண்ணிஎனும்
நதிவாழ் பனசை நகர்வாழ் பெரியநன் ஞயகியே! 10

(வேறு)

நத்தேறு கரத்தரியும் நலமேறு மறையவனும்
நாடிக் காணும்
பித்தேறு மனத்தினராய்ப் பிலமேறு ககனமதில்
பெரிதும் நேடி
மத்தேறு ததியாக மதியேறு சடைமுடியர்
மகிழ்ந்து சேரும்
புத்தேறு பொழிற்பனசைப் பெரியநாயகி மலர்த்தாள்
புகழ்ந்து வாழ்வாம்.

# ஆலயபூஜைப் படிக்காசு நிதி

## நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

| | |
|---|---|
| திரு/திருமதி முன் இருப்பு | 26549—15 |
| குடந்தை துர்க்காகுடில் அப்பு | 10—00 |
| உக்கரை V. கைலாசம் | 5—00 |
| காரைக்குடி V. மலர்விழி | 5—00 |
| காரைக்குடி V. தாயுமானவன் | 5—00 |
| வெள்ளக்கோவில் R. C. சாமிநாதன் செட்டியார் | 5—00 |
| ஆவல் சின்னம்பாளையம் க. சுந்தரசாமி | 10—00 |
| ஆக ரூ | 26589—15 |

| | |
|---|---|
| சேங்கனூர் ஸ்ரீ சத்யகிரீஸ்வரர் ஆலயச் செலவு | 61—50 |
| பாணுதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு | 75—00 |
| தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு | 91—00 |
| திருந்து தேவன்குடி ஆலயச் செலவு | 90—00 |
| ஆக ரூ | 317—50 |


Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
L No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

**ஸ்ரீ நடராஜ விலாஸ்**

**ஜுவல்லரி ஹால்**

**சிதம்பரம்**

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்

தென்னார்க்காடு மாவட்டம்—608 001

ஸ்ரீ குமரகுருபரர் நெறிவிளக்கம் : 3

# எப்படிப் பிழைப்பார்?

நெல்லை சிவமணி, புலவர் ம. சிவசம்பு எம். ஏ.,
பாளையங்கோட்டை.

பரப்பரப்பு ஒரே பரபரப்பு. நண்பர் ஒருவர் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தார். ஏன் இப்படி பரப்பரப்பாக இருக்கிறீர்கள்? நிதானமாகக் காரியங்களைச் செய்யுங்களேன் என்றார் ஒரு அருளாளர். பரபரக்க வேண்டாம்; பலகாலும் சொல்லுகிறேன் என்றார். கேட்டால்தானே! உங்களுக்கு என்ன தெரியும். இன்னும் சிறிது நேரத்தில் காரியம் முடிய வேண்டும் என்று பேசிக் கொண்டே ஓடினார். கால் தடுக்கிக் கீழே விழுந்தார். காலில் சிறிது காயம். மூக்குக் கண்ணாடி வேறு கீழே விழுந்து உடைந்தது. எத்தனை சிரமம் "பதறாத காரியம் சிதறாது" என்பது பழமொழி. இதையெல்லாம் படிக்கிறோம். வாழ்க்கையில் கடைப் பிடிக்கிறோமா?

பரபரப்பாக நடப்பதால் உடல் நலம் கெடுகிறது. இரத்த அழுத்தம் ஏற்படுகிறது. உடலும் மனமும் ஒருங்கே பதறிக்குலை நடுக்கம் நடுங்குகின்றன. செய்ய வேண்டிய காரியங்களைச் சரியாகச் செய்யாமல் தவறாகச் செய்கிறோம். இரவு பகலாக இப்படி வீணான காரியங்களைப் பரபரப்பாகச் செய்து துன்பப்படுகிறோம். அருளாளர்கள் நம்மை உண்மையை உணரச்செய்து நன்னெறிக்கண் செலுத்தினாலும் செய்வதில்லை. அவ்வழியிற் செல்வதற்கு அஞ்சி நடுங்குகிறோம். இத்தகையோர் எப்படித்தான் பிழைக்கப் போகிறார்களோ! என்று நம்மீது இரக்கம் கொண்டு கூறுகிறார் ஸ்ரீ குமரகுருபரர்.

பரபரப்பி னோடே பலப்பல செய்தாங்கு
இரவுபகல் பாழுக்(கு) இறைப்ப — ஒருவாற்றான்
நல்லாற்றில் நூக்கில் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றான் உய்வார் இவர்

நீதிநெறிவிளக்கம் — 90

# பெரிய புராணத்தில் பரிசு

தொடர்ச்சி

ச. திலகவதி, எம். ஏ., எம் பில்.

மயிலாடுதுறை

9. "அப்பரிசங்கு அவர் மொழிய ஆண்ட அரசினைக்காணும் ஒப்பரிய பெருவிருப்பு மிக்கோங்க ........."

திருஞானசம்பந்தர் — 929.

10 "பல்லார்முன் பிற்றைநாள் இவர்க்கடுத்த பரிசுரைப்ப..."

திருமூலர் — 19.

11" ஆடும் பெருமான் பாடல் கேட்டருளித் தாழ்த்தபடி தமக்குக் கூடும் பரிசால் முன்பருளிச் செய்த ........."

கழறிற்றறிவார்—60.

தன்மை என்ற பொருளில் வருமிடங்கள் ஆறு அவையாவன:

1 "கேளும் பொருளும் உணர்வுமாம்பரிசு வாய்ப்பக் கெழுமினர் ....."

பெருமிழலைக் குறும்ப நாயனர் புராணம் — 6

2 "மெய்ம்மை போற்றி விடாத விருப்பினல் தம்மை உன்னும் பரிசு தந்தான்பவர் ........."

—திருஞானசம்பந்தர் புராணம் — 215.

3 "எப்பரிசால் தொழுதுய்ந்தது?

—திருஞானசம்பந்தர் புராணம்—495.

4 "கொள்ளும் பெருமைக் குலச்சிறையார் தொண்டினையும் உள்ள பரிசெல்லாம் மொழிந்தங்கு உவந்திருந்தார்.........",

—திருஞானசம்பந்தர் புராணம்—943

5 "எல்லையில் பெருங்களிப்பினல் இப்பரிசியம்பி......."

—திருஞானசம்பந்தர் புராணம்—1014

6 "ஈசர்க்கேற்ற பரிசினல் அருச்சித்தருள எந்நாளும் பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பின் ஒலி அளித்தார்

—கழறிற்றறிவார் புராணம்—24.

நீக்கம் என்ற பொருளில் ஓரிடத்தில் வருகின்றது

1 "பொங்கி எழும் இசைபாடிப் போற்றிசைத்தங்கொரு பரிசு புறம்பு போந்தார் .."

—திருஞானசம்பந்தர் புராணம் 470

திண்ணம் என்ற பொருளில் ஓரிடத்தில் வருகின்றது.

1 "அப்பரே! வேதவனத்தையர் தம்மை அபிமுகத்துத் திருவாயில் திறந்து புக்கே, எப்பரிசும் நாம் இறைஞ்ச வேண்டும் .. ..'

—திருஞானசம்பந்தர் புராணம்—581.

செயல் என்ற பொருளில் வருமிடங்கள் இரண்டு:-

1 "பத்திரம் வாங்கித் தான்முன் நினைத்த அப்பரிசே செய்ய

மெய்ப்பொருள் நாயனர் புராணம்—15

2 மணலிற் கறந்து பாலுகுத்து வந்த பரிசே செய்கின்றான் என்றான் ........."

—சண்டேசுர நாயனர் புராணம்—42.

வழி என்ற பொருளில் ஓரிடத்தில் வருகின்றது:-

1 "எப்பரிசுங் கிடையாத வகைமுட்ட இடருழந்தே ஒப்பில் மனை விற்றெரிக்கும் உறுபொருளும் மாண்டதற்பின்........."

—கலியநாயனர் புராணம்—12.

வகை என்ற பொருளில் ஓரிடத்தில் வருகின்றது:-

1 "மாற்றார்க் கமரில் அழிந்துள்ளோர் வந்துதம் பால் மா நிதியம் ஆற்றும் பரிசு பேசினல் அதனை நடுவுநிலை வைத்து...'

—மூனையடுவார் நாயனர் புராணம்-3.

செய்தி என்ற பொருளில் ஓரிடத்தில் வருகின்றது;-

1 "நன்னுளில் நாமிருந்த பரிசுரைப்பீர்

—சிறுத்தொண்ட நாயனர் புராணம்—41.

கொடை என்ற பொருளில் வருமிடங்கள் மூன்று அவையாவன:

1 "அண்ணலார்க் காம் பரிசு தாம் சோதித்தமைப் பதற்குத் திண்ணனர் திருவாயில் அமைத்தார் ஊன்திருவமுது......"

கண்ணப்ப நாயனர் புராணம்—147.

2 "............ஒருவர் அதற்குப் பரிசில் எனச் செம்பொன்மணி
மன்றினி லெடுத்த செய்ய பாதத்திருச் சிலம்பின் இம்பர்
நீட எழுந்த ஒலி தாமும் எதிரே கேட்பித்தார்........."

—கழறிற்றறிவார் புராணம்—25

3 "அப்பரிசருளப் பெற்ற அம்மையும்........."

—காரைக்காலம்மையார் புராணம்—62.

இவ்வாறு ஐம்பது இடங்களில் பரிசு என்ற சொல்லைச்சேக்கிழார் கையாண்டுள்ளமையை அறிய முடிகின்றது.

"சொல்லுக சொல்லிற் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து"

என்னும் குறளுக்கேற்பச் சேக்கிழார் பயன்படுத்தும் சொற்களோ சொற்றொடர்களோ பயனுள்ளவையாகவும் மிகச் சிறப்புடையன வாகவும் அமைந்த மாண்புடையவை. பரிசு என்ற சொல் மங்கல மான சொல்லாகும். இச்சொல்லையே பன்னிரண்டு பொருள்களில் வைத்துப் பாடினர் சேக்கிழார். தீமையைக் குறிக்கும் இடங்களில் கூட தீயசொல்லை - அமங்கலமான சொல்லைப் பயன்படுத்த விரும் பாதவர் சேக்கிழார் சுவாமிகள். முத்தநாதன் வஞ்சகத்தால் மெய் பொருள் நாயனரைக் கொன்றான். அச்செயலைக்கூட "தான் முன் நினைந்த அப்பரிசே செய்தான்" என்று கூறுகின்றார். கொலைச் செயலைக்கூட பரிசு என்னும் மங்கலமான சொல்லால் சொல்லும் நயம் படைத்தவர் சேக்கிழார். சொற்களைப் பயன்படுத்தும் முறை யையை நயம்பட உணர்த்தும் முறையைப் பரிசு மூலம் நமக்கு அறிவுறுத்துகின்றார் சேக்கிழார். சேக்கிழார் பெரிய புராணத்தின் வாயிலாகத் தரும் பரிசு நமக்கெலாம் நல்லதொரு பரிசே ஆகும். சேக்கிழார் சைவ உலகிற்குத் தந்த பெரும்பரிசு பெரியபுராணமாகும் பெரியபுராணத்தைக் கற்று, கற்றபின் அதன் வழி நிற்றலே நாம் சேக்கிழாருக்குத் தரும் பரிசாகும்

★★★

# அம்மானையின் தோற்றம்

கா. சுப்பிரமணியன், ஸ்ரீவைகுண்டம்

'அம்மானை' தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்றாகும். அதன் வளர்ச்சி குறித்துப் பலர் எழுதியுள்ளனர். அதன் தோற்றம் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

'அம்மானை' மகளிர் விளையாட்டுகளில் ஒன்று என்பதனையும் இலக்கியங்கள் காட்டுகின்றன.

'அம்மானை' என்னுஞ்சொல், பத்துப் பாட்டிலும், எட்டுத் தொகையிலும் இடம்பெறவில்லை. இவ்விளையாட்டைச் சங்க காலத்தில் 'கழங்கு' எனக் குறித்தனர். ஆகவே கழங்கின் தோற்றத்தை ஆராய்வது அம்மானையின் தோற்றத்தை ஆராய்வதாகும்.

கழகச் செந்தமிழகராகி, 'அம்மானை' என்னுஞ் சொல்லிற்கு, கொக்கான் வெட்டுதல், ஒரு வகைப் பாடல் என இருபொருள் தருகிறது. 'கொக்கான்' என்பதற்கு, 'பெண்கள் விளையாட்டு, அம்மானை' என இரு பொருள் தருகிறது. ஏழு கூழாங்கற்களைக் கொண்டு மகளிர் விளையாடும் விளையாட்டை, கொக்கான் வெட்டுதல்' என லெக்சிகன் (vol II part I பக்கம் 1124) விளக்குகிறது.

இன்று கழற்சிக்காய் விளையாட்டில் சிறுகற்களையே காய்களாக பயன்படுத்துகின்றனர். ஆனால் அக்காலத்தில் கழற்சி என்றும் செடியின் காய் இவ்விளையாட்டிற்குப் பயன்பட்டது. இன்று கழற்சிக் காய்களுக்குப் பதிலாக கற்களையே பயன்படுத்தினாலும் 'கழற்சி விளையாட்டு' என்னும்பெயர் மாறவில்லை.

கழற்சிக்காய், சங்க காலத்தில் கழங்கு என வழங்கப்பெற்றது பெண்கள் ஆடும் கழற்சிக்காயாட்டம் 'கழங்காடல்' எனப்பெற்றது.

கழங்கு என்னும் சொல்லிற்கு, கழகச் செந்தமிழ் அகராதி தரும் பொருள்களாவன:- கழற்சிக்காய்; கழற்சி விளையாட்டு; சூது; கழற்சிக் காயைக் கொண்டு வெறியாட்டில் வேலன் சொல்லுங்குறி.

கழற்சிக்காயால் குறியறிந்து சொல்லுதலை, 'கழங்கிட்டுரைத்தல்' கழங்கு எடுத்தல்', 'கழங்கு மெய்ப்படுத்தல்' என்றனர்.

கழங்கிற்கும் வேலனுக்கும் இடையே உள்ள தொடர்பே 'கழங்கு, அல்லது 'அம்மானை'யின் தோற்றம் எனலாம். இவ்வுண்மையை பேராசிரியர் நா. வானமாமலை, 'வேலனது கழங்காட்டத்தை முன்னோடியாகக் கொண்டு மகளிர் கழங்காடினர்' என்பர். இக்கருத்தினை தனது 'தமிழில் அம்மானைப் பாடலகள்' என்றும் நூலில் த. இராஜாராம் அவர்கள் ஏற்று எழுதியிருக்கிறார். இவ்வுண்மையை விரிவாக ஆராயலாம்.

இனக்குழு சமுதாயத்தில் 'மந்திரம்' (m g c) முதலிடம் வகித்தது என்பர் மானிடவியலார். அம்மக்கள் எல்லாவற்றிற்கும் 'முருகணங்கு காரணம் என நம்பினர் (ஐங்குறு நூறு பாடல் 243 உரை) இன்றும் காலரா, அம்மை போன்ற நோய்கள் பரவுமானால் அவற்றை சிறு தெய்வங்களின் செயலாகக் கருதுவதனைக் காணலாம். அன்று முருகணங்கை வரவழைக்க 'வெறியாடல்' என்றும் சடங்கினைச் செய்தனர். அச்சடங்கினைச் செய்தவர் 'வேலன்' எனப்பெற்றார். அவர் தெய்வ ஆவேசம் பெற்றுக் குறிசொன்னார். அவ்வாறு குறிசொல்ல, அவருக்கு கழங்கு பயன்பட்டது.

'கட்டினும் கழங்கினும் வெறியென விருவரும் ஓட்டிய திறத்தாற் செய்திக்கண்ணும்' என்பது தொல்காப்பியம். (களவு சூத்திரம் 24

'கட்டு' என்பதற்கு, 'கழங்குக் குறி' என்பது பொருள். இதனை' கட்டுப்பார்த்தல்' என்பர். இவ்வடிப்படையில் 'கட்டும்', 'கழங்கும்' ஒரே விதமான குறிபார்த்தலையே குறித்தன. ஒரு பொருளைத்தரும் இருசொற்களான 'கட்டும்', 'கழங்கும்' பிற்காலத்தில், தம் பொருளில் சிறிது மாறுபடுகின்றன. இம்மாற்றம் உரையாசிரியர் காலத்தில் ஏற்பட்ட மாறுதல் என்பது பின்னர் விளக்கப்படுகிறது.

'தெய்வ ஆவேசங் கொள்ளுதல்' என்னும் பொருள் தரும், 'கட்டேறுதல்' அல்லது 'வெறிபயர்தல்' மூலம் கட்டுவிச்சி, வேலன் ஆகியோர் நிகழ்வது உரைத்தனர்.

வேலன், இவ்விடுக்கண் கழங்கு வைத்துப் பிள்ளையாரால் (முருகனால்) வந்ததென முதலில் கூறி, பின் வெறியாடுவான் என மதுரைக்காஞ்சி (வரி. 611 உரை) ஆகும் முறையைக் கூறிற்று. பெய்ம்மணலால் முற்றத்தை அழகு பெற அமைத்து, வேலன் கழங்கினால் அறிந்து குறிசொன்னதை ஐங்குறுநூறு (பாடல் 248) காட்டுகிறது.

அகநானூற்றுப் பாடல் (195) வேலன் கழங்கிட்டு உரைத்தலை விவரிக்கிறது. கழற்சி வித்து பலவற்றை முருகன் முன் போட்டனர்; வேலன் தன் தலையில், ஆடை சூடிக் கொண்டான்; கையில் கோல் ஒன்று ஏந்தியிருந்தான். அக்கோல் பல தலைகளைக் கொண்டது சிறு பைகளைக் கட்டியிருந்தான். அக்கோலாற் கழங்கு வித்துக்களை வாரி யெடுத்து, குறிப்புக் காணுகின்றது ஒருவகைக்குறி என்கிறது.

ஐங்குறு நூறு 245 ஆம் பாடலின் உரை, 'காணும் குறிப்பு' என்னவென்பதை விளக்குகிறது. 'கழங்குகளைப் பரப்பி எண்ணி ஒற்றையாயின் இன்னது என்றும், இரட்டையாயின் இன்னது என்றும் துணிந்து கூறுதல் என்கிறது.

குறிஞ்சிப்பாட்டில் (வரி 4), தாய் தன் மகள் 'நோய் அறியுநர் வினவுகிற செய்தியைக் காணலாம். அக்காலத்தில் நோய் அறியுநர் யார்? இக்கேள்விகளுக்கு உரையில் விடை கிடைக்கிறது. கட்டினலும் கழங்கினலும் எண்ணியறிபவரை வினவுவராம் அவர்களோ 'தெய்வத்தால் வந்த வருத்தம்' என்பர். கட்டுப்பார்த்தலை, சிறு முறத்தில் பரப்பிய நெல்லிற் பார்க்கும் ஒரு வகைக்குறி எனக் குறிஞ்சிப் பாட்டு நான்காம் வரி உரையாலும், அடிசகுறிப்பாலும் அறியலாம். (ப. 482) பெருங்கதை (1:37:235, பக்கம் 16) உரையும் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

சிறிய திருமடல் பாடலும் (20 to 22), உரையும் வேறு சில செய்திகளைத் தருகின்றன. கட்டுவிச்சி தெய்வ ஆவேசங் கொண்டாள் அழகிய சிறு சுளகிலிருந்து சில நெற்களைப் பிடித்தெடுத்து முன்னே வீசினள். வியர்த்தது; விதிர்விதித்தாள்; மயிர்க்கூச்செறிந்தாள். கையை முகர்ந்து பார்த்தாள்; ஆயிரம் திருநாமங்களையுடைய திருமாலே இந்நோய் செய்தவன் எனக்கண்டாள். பின்னர் கார்மேகம் போன்ற அவன் திருமேனியைப் படி எடுத்துக் காட்டினள் அவனது திருக்கையில் உள்ளது வலம்புரிச் சங்கென்று அபிநயித்துக் காட்டினள்.

கட்டுவிச்சி இம் முடிவிற்கு எவ்வாறு வந்தாள்? கண்களை மூடிக் கொண்டு ஒரு பிடி நெல் எடுத்து அவற்றை எண்ணிப் பார்த்து ஒற்றைப்படை எண் வருகிறதா? இரட்டைப்படை எண் வருகிறதா என்று பார்த்து அதனல் தேக சம்பந்தமான நோயா, பகவத்

விஷயமான கோயா என இரண்டில் ஒன்றை நிச்சயிபபது என்ற குறியாகக் கொண்டு அறிந்தாள். இவ்வாறு பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காச்சாரியார் அவர்கள் விளக்கியுள்ளார். (இயற்பா-சிறிய திருமடல் : திவ்வியார்த்த தீபிகை, பக்கம் 3(கடிபாடல் உரை)

மேற்கூறிய வேலன், கட்டுவிச்சி ஆகியோர் ஒற்றையா. இரட்டையா என்னும் அடிப்படையில் முடிவெடுக்கும் குறி கூறினர்

திருக்கோவையாரில் (பாடல் 285) கட்டுவிச்சி, தலைவிக்கு முருகனாங்கு ஒழியப் பிறிதில்லை எனக் கூறினாள். அவள் சொன்ன முறையினைக் காணலாம்.

சிற்றம்பலத்திருப்பவன் நடராசன் அவனுடைய மகன் முருகன் ஊர்கின்ற மயிலிது அல்லவா? அவன் கொடியிலுள்ள சேவலை எல்லோரும் காண்க. அதன்றி வலிமை படைத்த சூரபன்மனைக் குறைத்த வேல்தான் இது அல்லவா? இவை எல்லாம் சொல்வது என்ன? இப்பரப்பிய நெல்லின்கண் வந்து தோன்றுகிறது முருகனது உருவமல்லவா! காணுங்கள்!.

இவ்விளக்கம், மந்திரவாதிகள் இலையில் மைதடவி, அதனுள் நிகழ்ச்சிகளைக் காட்டுவதற்கு ஒப்பாகத் தோன்றுகிறது. உண்மையில் அவ்வாறில்லை ஏனெனில் சில எண்களை அவள் உருவகங்களாகக் காண்பதாக உரை விளக்கம் (ப: 539-541) காட்டுகிறது.

"அக்குறிக்கிலக்கணம்: நெல் மூன்றும், இரண்டும் ஒன்றும்; படுகை அஃதாவது அடியும், கொடியும், உவகையும். இதனில் அடியாவது மயில்;, கொடியாவது சேவல்; உவகையாவது வேல் ஆதலான் முருகனைக்செனவே கூறப்பட்டதென அறிக"

மேலே கூறப்பெற்ற குறியில் மூன்று மயிலாகவும், இரண்டு சேவலாகவும், ஒன்று வேலாகவும் விளக்கப்படுகிறது. எவ்வடிப்படையில் இவ்விளக்கம் என்பது தெளிவாகவில்லை.

ஒற்றை, இரட்டை என்பதோடு இங்கு மூன்று என்னும் எண்ணும் இடம் பெறுகிறது. சில இனக்குழு மக்களுக்கு மூன்று, ஐந்து அல்லது பத்திற்கு மேல் எண்ணத் தெரியாது.

இவ்வளர்ச்சி, எண் சோதிடத்தை நினைவூட்டுகிறது. இன்றும் மந்திரவாதி, பூசாரி, சோதிடர் ஆகியோர் பல சமயங்களில் இச்சோதிடத்தின் மூலம் வினைவுகளை விவரிக்கின்றனர்.

ஒற்றையா, இரட்டையா, பூவா தலையா என்பன ஒருவகை: சோதிடத்திலும் எண்கள் ஒன்பதுடன் நின்று விடப்பார்க்கலாம். பத்திரிக்கைகளில் வரும் எண் சோதிடம் இதற்குச் சான்றாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | 10 | 19 | 28 |
| 2 | 11 | 20 | 29 |
| 3 | 12 | 21 | 30 |
| 4 | 13 | 22 | 31 |
| 5 | 14 | 23 | |
| 6 | 15 | 24 | |
| 7 | 16 | 25 | |
| 8 | 17 | 26 | |
| 9 | 18 | 27 | |

மேலுள்ள நான்கு வரிசை எண்களில், முதற் வரிசை எண், அதனதன் இடப்பக்கததிலுள்ள எண்களின் கூட்டுத் தொகையாக அல்லது மறு கூட்டுத்தொகையாக அமைவதைக் காணலாம் மேலும் இவற்றை ஒற்றை, இரட்டை என்னும் இரண்டிற்குள்ளும் அடக்கி விடலாம். ஒற்றைப்பட எண்கள் அதிர்ஷ்டமானவை என்னும் நம்பிக்கை நிலவுகிறது. சில எண்களை வெறுக்கிறார்கள். ஆயினும் எண் சோதிடத்தின் முழுவிபரங்கள் அறியமுடியவில்லை

இன்றும் ஆருடம் சொல்பவர், வந்திருப்பவரிடம் ஒரு எண்ணினைச் சொல்லச் சொல்லி, அவ்வெண்ணின் அடிப்படையில் குறி சொல்லக் காணலாம் எத்தனை இலக்கியங்களையும் கூட்டல் மறு கூட்டல் மூலம் ஒன்பதற்குள் கொண்டு வந்து விடலாம் மூன்று ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது போன்ற இலக்கங்களுக்கு தனித்தனி விளக்கங்களும் உள்ளன சில மந்திரங்களாகக் கருதப் படுகின்றன.

கட்டு, கழங்கை எண்ணியறிந்ததிலிருந்துநெல்லை எண்ணி அறியும் நிலை பிற்காலத்தில் ஏற்பட்டிருக்கும். இதனை உரையாசிரியர் காலத்தில் ஏற்பட்ட மாறுதல் எனலாம்.

உணவு சேகரிக்கும் (Food ga'he:ing stage) நிலையில் குறிஞ்சி நில மக்கள் வாழ்ந்தனர் அக்குறிஞ்சி நில மந்திரவாதி வெறியாள் வேலன் போன்றோர். அங்கு கழற்சிக் காய் கிடைத்தது. அதனைக் கொண்டு குறி கூறினர்.

உணவு உற்பத்தி செய்யும் (Food producing stage) நிலையில் மருதநில மக்கள் வாழ்ந்தனர் அந்நிலத்தின் விளைபொருளே நெல் ஆகவே குறி பார்த்தலுக்குக் கால வரிசை நாகரிக வளர்ச்சிப்படி முதலில் கழற்சிக்காயும், பின்னர் நெல்லும் பயன்படுத்தப் பெற்றிருக்க வேண்டும் என்பது புலனாகும். வேளாண்மை வளர்ச்சியும், அரிசியுணவும் வழக்கிற்கு வந்தபோது நெல் பெருமளவில் குறி பார்க்கப் பயன்பட்டதில் வியப்பில்லை.

மானிடவியலார், சடங்குகளிலிருந்தே கலைகளின் தோற்றுவாயைக் கண்டனர் வரிச்சடங்குகளான ஒழுங்கு நடனங்களிலிருந்து நாட்டுப்புற நடனங்கள், நாட்டுப்புறப்பாடல்கள் வளர்ச்சிபெற்றன கும்மி, ஒயில் அவற்றின் எச்சங்களாக இன்று நிலவுகின்றன.

அம்மானை ஒரு வகைக் கூத்து என்பதனைச் சிலப்பதிகார உரை காட்டுகிறது. வேலன் வெறியாடலும் இக்கூத்து வகையேயாகும். மானிடவியலார் கூறும் சடங்குகளே அக்காலக் கூத்துகள் எனலாம்.

அக்கூத்து அல்லது சடங்குகளில் குறிகாணப் பயன்படுத்திய கழற்சிக்காய்களைப் பின்னர் மகளிர் போலச் செய்தலாகிய விளையாடலாக ஆடினர்.

இம்மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது என அறியப் போதுமான தடயங்கள் சில; ஆயினும் சில விளக்கங்களுக்கு இடமுண்டு.

மானிடவியலார் கூற்றுப்படி பெண்கள் ஆதிக்கம் வகித்த சமுதாயம் ஆதிச்சமுதாயம் அதில் தாய்த் தெய்வங்களைக்காணலாம் அச்சமுதாயத்தில் பெண்களே மந்திரவாதிச்சிகளாக, பூசாரிகளாக இருந்தனர் அவர்கள் வெறியாள், கட்டுவிச்சி, அகவன்மகள் குறமகள், ஆடுமகள், சாலினி, முதுவாய்ப்பெண்டிர், கணிகாரி போன்றவர்களாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளனர்.

ஆண்கள் செல்வாக்குப் பெற்ற சமுதாயத்தில் ஆண்கள் மந்திரவாதம் செய்யத்தொடங்கினர் அம்மாற்றம் நேர்ந்த முறையை மானிடவியல் விளக்குகிறது.

பெண்ணுடை தரித்து,முதலில் ஆண்மந்திரவாதி செயல்பட்டான் பெண்ணின் ஆடையே, 'தொத்து மந்திரமாக' (Contagious Magic) பெண்ணின் தன்மையைத் தரும் என்னும் மந்திர நம்பிக்கை அடிப்படையில் அவ்வாறு முதலில் செயல்பட்டான். அதன் வளர்ச்சி நிலையாக, பின்னர் 'வாமாசாரம்' எனப்பெறும் போக சாதனம் வாயிலாக தம்மைப் பெண்மைத் தன்மையுடையவர்களாக்கிக் கொண்டு, 'தாந்திரிகம்' செய்யத் தொடங்கினர்.

தொடரும்.

# அங்கதம் - Satire

வே. சீதாலெட்சுமி எம். ஏ. எம் பில்.,

திருப்பனந்தாள்.

தனிமனிதனின் குறைபாடுகளும் சமூக ஊழல்களும் கண்மூடி பழக்கங்களும், எந்தநாட்டிலும் எக்காலத்திலும் காணப்படுதல் இயல்பு. குணமே உருவாய் குற்றமில்லாத சமுதாயத்தை உலகில் காணுதல் அரிது. அரசியல் தொழிலியல், சமயவியல் முதலிய பல் வேறு துறைகளிலும், அவை காலந்தோறும் பல்வேறு அளவிலும் பல்வேறு வகையால் பரந்துகிடப்பதுண்டு. குறைபாடு கண்ட உள்ளம் வெகுண்டு கொட்டுவதனால் விளையும் பயன்யாதும் இல்லை வெகுளி வசையாகவும், வசைநகையாகவும், வெளிப்படும் போது வசைக்கு ஆளானோரும் நின்று கேட்கும் நிதான நிலையை அவ் வெகுளி எய்துகிறது. குறையைக் குத்திக்காட்டும் கொடுநோக்கும் பின்னணியில் நின்று கொண்டு குறையைக்களையும் பெருநோக்கம் முன்னணியில் இடம்பெற உதவுகிறது. இவ்வாறு வசையும் நகையுமாய் வெளிப்படும் கவிதைப் படைப்பு "அங்கதச் செய்யுள்" என்பபடுகிறது.

**தொல்காப்பியம் கூறும் அங்கதம் : -**

தமிழில் அங்கதம் என்பது ஆங்கிலத்தில் "**Satire**" என்று வழங்கப்படுகிறது.

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயினும்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்".

என்று தொல்காப்பியம் அங்கதம் பற்றுக் கூறுகின்றது. பின் அங்கதத்தின் இரு வகைகளைக் கூறுங்கால்,

'அங்கதந் தானே அரில்தபத் தெரியில்
செம்பொருள் கரந்ததென விருவகைத்தே"

என்றும், 'மொழி கரந்த சொல்லினது பழிகரப்பாகும் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். வசை வெளிப்படையாகப் புலப்பட நிற்பது செம்பொருள் அங்கதம். வாழைப்பழத்தில் ஊசியை

இறக்கினூற் போன்று, வசையைக் குறிப்புச் சொற்களால் மறைத்துச் சொல்வது பழிகரப்பாகும்.

**வசை பற்றிய மேனூட்டர் குறிப்பு :-**

மேனூடுகளில் வழங்கும் வசை இலக்கியம் தமிழ் அங்கதத்தோடு பெரிதும் ஒப்புமையுடையது. வசையானது சொற் சுருக்கமும், புண்படுத்தாச் சொல்நயமும் சீர்திருத்த நோக்கம் கொண்ட பொருளமைதியும், எடுத்த கருத்தைத் தெளிவோடு வலியுறுத்தும் இலக்கியப் பண்பும் பொருந்தித் திகழ வேண்டுமென்பார் மேனூட்டாசிரியர், எதிர்மறைக் குறிப்பும், கிண்டலும், கேலியும், விகடமும், நகையும் வசை இலக்கியத்தை வளமாக்கும் துணைப் பொருட்கள் என்பர்.

**செம்பொருளங்கதம் :-**

வாய்கரவாது ஒருவர் குற்றத்தை அவர் முன்னிலையிலே கடுஞ்சொல் கூறித் திருத்துதலே செம்பொருளங்கதம் சொற்சுவை பொருட் சுவையாகிய செவியால் நுகரப்படும் சுவைகளை உணராது, வாயால் நுகரப்படும் உணவின் சுவையாலேயே ஈடுபடும் மனிதர் இருந்தாலும் இறந்தாலும் என்ன பயன்? என்ற பொருள்பட குறளில்,

'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்''

என்று கூறப்படுகிறது. இங்ஙனம் வசையினை வெளிப்படையாகக் கூறுதல் செம்பொருளங்கதமாகும்.

**பழிகரப்பங்கதம் : -**

கவிநயக்தோன்றக் கூறற்குக் கரந்த மொழியிற் கூறலே சிறந்ததாகும். வசைப் பொருளினைச் செம்பொருள் படாமலிசைப்பது பழிகரப்பங்கதமாகும். இதுவே "Satire" என்ற ஆங்கிலத் தொடருக்கு மிகப் பொருத்தமானது. இக்கருத்து குறளில்.

"தேவ ரனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்''

என்று கூறப்பட்டுள்ளது. நெஞ்சத்து அவலமில்லாத 'வஞ்சகக் கயவர் சாதாரண மண்ணுலக மக்களுக்கு ஒப்பாகார் விண்ணுலகில் வாழும் தேவர்கட்கு ஒப்பரவார். எதனாலெனில் தேவர்கள் தம்மை

நியமிப்பாரின்றித் தாம் எண்ணியவற்றைத் தாமே செய்தொழுகுதல் போலக்கீழ்மக்களும் நல்லன, தீயன ஆராயாது தாம் விரும்பின வற்றை விலக்கற்பாடியின்றிச் செய் தொழுகும் இயல்புடைமை யான் என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தேவரையும் கயவரையும் ஒப்புமைப் படுத்திக் கயவர் பழியை மறைத்து அங்கதம் அமைக்கின்றார் வள்ளுவர்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் அங்கதம் :-

சமுதாயத்தின் ஒரு அங்கமாகத் திகழும் தனிமனிதனின் குற்றத்தைத் திருத்த முற்படும் நோக்கத்துடன் அமைதலே சிறந்த அங்கதமாகும். புறநானூற்றிலுள்ள ஔவையார் பாடல் இதற்குச் சான்று. ஒருநாள் ஔவை தனக்கு அமிழ்தினுமினிய தீங்கனியைத் தந்த அதியமானிடம் பெரிதும் அன்புடையராய் அவனால் ஆதரிக்கப் பட்டிருக்குங்கால் காஞ்சித் தொண்டைமானிடம் தூது விடுக்கப்பட்டு அவன்பாற் சென்றார். தொண்டைமான் தனது வீரத்தையும், படைபலத்தையும் ஔவை கண்டு வியக்குமாறு இறுமாப்புடையராய் ஔவையை நன்கு வரவேற்றுத் தன் படைக் கலக் கொட்டிலைக் காட்டினன் அங்கே வேல், வாள், முதலியன திரண்ட கைபிடிகளையுடையனவாய் எண்ணெய் பூசப்பட்டு மயிலிறகு மாலை முதலியன அணியப்பட்டுக் காட்சி தந்தன. அவை ஏவலாளருந் தொடப்படாமல் வைக்கப் பட்டிருத்தலைக் கண்டு வியந்து கூறுவார் போன்று செருக்குமிக்க தொண்டைமானின் நெஞ்சில் உறுத்தும் வண்ணம் ஓர் அழகிய பாடலைப் பாடினார்.

"இவ்வே
பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்டிரணோன் காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனக ரவ்வே: அவ்வே
பகைவர்க்குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ"

என்பதாகும். இதன் கண், அதியமான் அடிக்கடி, போரில் ஈடு படுதலால் அவனது படைகள் பகைவரைக் குத்தியதால் கங்கும் முனையும் சிதைந்து கொல்லனது பணிக்களரியாகிய சிறிய கொட்டி லின்கண் செப்பனிட உள்ளன என்றும், தொண்டைமான் அத்தகைய போர்ச் செயலில் ஈடுபடாது அஞ்சியொழுகும் இயல்பினனாதலின் அவன் படைக்கலங்கள் எவ்வித சிதைவுமின்றி எண்ணெய் பூசப் பட்டு வனப்புடன் திகழ்கின்றன என்றும் கூறிய பான்மை அறிந்து

இன்புறந்தந்தது. தொண்டைமானின். ஆயுதங்களைப் புகழ்வது போலப் பழித்து அவன் குறையைக் குறிப்பாகக் கூறிச் செருக் கழியச் செய்த ஔவையாரின் புலமை பாராட்டற்குரியது.

"உவர்க்கட லன்ன செல்வரு முளரே
கிணற்றூற் றன்ன நீயுமா ருளையே"

என்று ஒரு புலவர் ஒரு கொடை வள்ளலைப் புகழ்ந்து கூறும் முகமாகக் கொடாத பெருஞ் செல்வரை இழித்துக் கூறியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் அகப்பொருள் பற்றி எழுந்த பாடல் களில் இவ்வங்கதக் குறிப்புக்கள் பல நயம்படக் கூறப்பட்டுள் ளன. பரத்தையிற் பிரிந்து மீண்டு வந்த தலைமகனைத் தலைவி தூற்றுகின்றாள் நேரே பழித்துக் கூறாமல் மறைமுகமாகப் பழித்துக் கூறுகிறாள்

"சுடர்ப் பூந்தாமரை நீர்முதிர் பழனத்து
அந்தூம்புவள்ளை ஆய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்"

சுடர் போல் விளங்கும் தாமரைகள் மலர்ந்துள்ள நீர் செறிந்த வயற்புறத்தில் ஒரு நீர்நாய், அது தன் போக்கில் போதொடு அமையாது. வள்ளைக் கொடிகளை உழக்கி மயக்குகிறது. அந்தக் கலக்கமும், மயக்கமும் தெளியுமுன்னர் வள்ளைக் கொடியிடையே உள்ளவாளை மீன்களை மேய்கிறது பின்னர் ஒன்றும் அறியாதது போலத் தனக்குரிய பிரப்பம் புதரிலே வந்து தங்கிவிடுகின்றது. இந்து இவ்வடிகளில் காணப்படும் காட்சி இந்த இயற்கை ஓவியத்தினூடு தலைவியின் இதயத்தில் குமுறியெழும் குற்றச்சாட் டும் பொதிந்துள்ளது.

பரத்தையின் உறவினரை மயக்கி அவரிடை வாழும் அவளது நலம் கவர்ந்து, பின் ஒன்றுமறியாதவன் போலத் தன் பழைய இல்லம் நாடி ஒப்புக்குத் தூங்குகிறான் தலைவன் இவ்வாறு தலைவ னின் புறத்தொழுக்க இயல்பினைச் சொல்லாமற் சொல்லி, சொற் களில் உருவெடாத குற்றச்சாட்டைத் தலைவனின் உள்ளத்தில் உலவச்செய்கிறது, இந்த உள்ளுறை உவமமாகிய அங்கதம்,

தொடரும்

## சந்தா விபரம்

வருடச் சந்தா ரூ. 22

ஆயுள் சந்தா ரூ. 250

தனிப் பிரதி ரூ. 2

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் தொலைபேசி

ஸ்ரீராமகிருஷ்ண மடம் 71359

மயிலாப்பூர் : சென்னை 600 004. 71231

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

( மாதப் பத்திரிகை )

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தா தாரராகச் சேருங்கள்.

உ

சிவ சிவ

திருப்பனந்தாள்

ஸ்ரீ காசிமடத்து இருப்பத்தோராவது தலைவர்

கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

# முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்

பஞ்சனிப் பரணி நாள்

# வெள்ளணி விழா வாழ்த்துப் பாமலர்

சிவசிவ எனுந்திரு மந்திரம் மலரும்
சிந்தையும் தெய்வநூற் றெளிவும்
தவநெறி கமழ்ந்தொளிர் காட்சியும் உரையும்
சைவநற் சாத்திர உணர்வும்
புவிநலங் கொளவளர் செய்கையும் அளியும்
பொலிந்தருள் மல்கிடும் வடிவும்
கவினுறக் கலந்தெனக் காட்சிகொண் டிலகும்
கயிலைமா முனிவர்தாள் வாழ்க! 1

திருமுறை அமிழ்தினைத் தேர்ந்தினி தருந்திச்
செந்தமிழ்க் கடல்திளைத் தன்பர்
பெருமகிழ் வெய்திடப் பெட்புடன் நாளும்
பேருரை வழங்கிடும் பெரும!
அருமறை தெளிந்தவர் அன்பொடு போற்றி
அடியெம்என் றடியமர்ந் தேத்த
வருமொரு பனசையின் வள்ளலே! எமது
மனத்துறை அடிகளே! வாழி! 2

மும்மொழிப் புலமையும் முதுமொழிச் சால்பும்
முறுகிய மாதவச் செம்மால்!
செம்மைகொள் நடைதேர் தெய்வமா முனிவ!
திருப்பனந் தாள்வளர் தேவே!
இம்மையில் எம்மிரு விழிவிருந் தாக
இலங்கிடும் ஏந்தலே! வாழ்க!
தம்மைவந் தடைந்தார் தழைத்திட அருளும்
தம்பிரான் அடிகளே! வாழ்க! 3

அடலரும் ஐம்பொறிப் பகையினை அடக்கி
அணிமிகப் பரணிகொண் டிலங்கும்
திடமுறு பரணிநாள் சீர்மிகத் தோன்றித்
திகழ்தரும் சைவமா முனிவ!
இடமுறு தவநெறி ஓங்கநுங் கமர்ந்தெம்
இருவினை நீக்கியம் பலத்தே
நடமிடும் இறைதாள் மேவும்நல் லுரைகள்
நவின்றுபல் லூழிகள் வாழி! 4

ஒப்பருஞ் சைவசித் தாந்தநன் னெறியும்
ஒளிவளர் செந்தமிழ்க் கலையும்
இப்புவி பரவிநல் இசைதிரு மடத்திற்(கு)
எய்திட அரும்பணி புரிவோய்!
செப்பருங் குருபரன் திருமர போங்கச்
செஞ்சடை வானவன் அருளால்
வைப்பமை தமிழ்போல் வளமெலாம் மேவி
வாழிய வாழிபல் லாண்டே! 5

இங்ஙனம்
*தி. கோ. பஞ்சாபகேசன்.*
*1 - 4 - 87*

# தினை விதைத்தவன்

புலவர் இரா. ம. பாலசுப்பிரமணியன் எம். ஏ, பி. எட்.,

[எம். பில்,] ஸ்ரீவைகுண்டம்

அயோத்தியை ஆண்ட தசரதனுக்கு முன்னோன் திலீபதி என்பவன். மாவீரன். ஒருநாள் வேள்விகளை முடித்தான். மணம் நிறைந்த நீரில் முழுகினான் அவனுக்கு வேதியர்கள் ஆசி கூறினர் இடுப்பில் கச்சுகட்டி வாளைச் சேர்த்தான் கவசங்கள் கையுறைகளை அணிந்தான். ஆரவாரத்துடன் அழகியதொரு காட்டில் வேட்டைபாடும் பொருட்டுப் படைகளுடன் புறப்பட்டான். கத்துங் கடலென பேரிகைகள் முழங்கின.

வனத்தினுட் புகுந்தான் திலீபன். நான்கு திசைகளையும் வளைத்துச் சென்று காட்டாறுகளையும் மலைச்சாரல்களில் இருந்த சோலைகளையும் தாண்டினான். காட்டை வெட்டிச் செடிகளை ஒதுக்கிக் கொண்டு வேட்டையாடத் தொடங்கினான்.

அவனுடன் வந்த மன்னர்களும், வீரர்களும், பாசக்கயிறுகளை எடுத்துக் கொண்டனர் அங்குவந்த காட்டுப் பன்றிகளின் மேல் நாய்களை ஏவினர். கண்ணிகளையும் பார்வை மிருகங்களையும் வைத்தனர். இவ்வாறு வைப்பதை ஒளிவைத்தல் என்பர். மான்களை வேற்படைகளாற் குத்தினர் சில மன்னர்கள் புலி வேட்டையாடினர். மான், மயில் புனுகுப்பூனை, புள்ளிமான், சிங்கம், கடுவாய்கரடி, பன்றி போன்ற பல மிருகங்களைக் கொன்றனர்.

அதைச் சார்ந்து மற்றொரு வனம். பெருமை வாய்ந்த அவ்வனத்தில் மயிலினங்கள் தூயமடமாதர்போல் கூத்தாடின. வண்டுகள் ஒத்தூத குயில்கள் பாட இக்காட்சியினைக் கருமந்திகள் பார்த்துக் களித்தன. கூகைகள் ஒருபுறம் குழற மற்றொரு புறம் குறுங்காடைகளும், மாங்காடைகளும், சந்தித்துக் கூவின. பருந்தினங்கள் "ஆயோ" எனக் குரலெழுப்பின. பருங்கழுகுகளும் கருங்காக்கைகளும் இரைந்தன. பெண்யானைகளைத் தேடிப் பெருகுகின்ற மதயானைகள் அவ்வனத்திற் கூப்பிட்டன. செடிகளிற்

பதுங்கியிருந்த வரிப்புலிகள் கண்களை உருட்டி விழித்து உறுமின. பன்றிகளும் பருத்த காடிகளும் ஒன்றுக்கொன்று சீறி உறுமிப் பாய்ந்தன. புள்ளிமான்களைக் கலைமான்கள் ஓடித் தேடியழைத்தன. அன்னமும் அன்றில்களும் கத்தின. அங்கு கரிய கடல்கள் ஒலிப்பது போன்றதோ ரோசையெழுந்தது.

சிங்கங்கள் கருமுகில்களை ஆனையென்று சீறிப்பாயும். மலைப் பாம்புகள் சட்டையைக் கழற்றும். மூங்கிற் காட்டிற் பழுதில்லா முத்துக்கள் சிதறிக் கிடக்கும் கின்னரர்கள் பெண்களுடன் அங்கு வந்து தழைகளைப் பறித்துப் பரப்பி மண்மேல் பாய் போல் விரித்து நலம் பாராட்டிக் கலப்பர்.

சூரியக்கதிர்கள் உட்புகாமல் மரங்கள் அடர்ந்திருந்தன. அதனால் ஏற்பட்ட கரிய இருள் கல்லார் கருத்துப் போன்றிருந்தது.

இவ்வனத்தினுள்ளும் திலீபன் விரும்பி வேட்டையாடினான். இரும்பை முறுக்கி வைத்தாற் போன்றும் கரும்பினுமினிய சொல்லார் நெஞ்சிற்காட்டும் அழகிய மார்பகங்களைப் போன்றும் அமைந்த கொம்புகளையுடைய கலைமான்கள் தம் துணையைப் பிரிந்து திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு ஓடுவதை அரசன் கண்டான்.

மதவேள் அழகிய கரும்பு வில்லெடுத்து வளைத்துக் கொண்டு மெல்லியலாரை நாடிவருவது போன்று தன் வில்லை வளைத்து அம்பு பூட்டிக் கலைமான்களைத் தொடர்ந்தான். கையிற் சிக்காது ஓடிய தொரு மான். அதைத் தொடர்ந்து சென்று சுற்றியலைந்தான். காலயர்ந்தான்; முகம்வாட உள்ளமெல்லாம் வெந்தது மலைப்பு ஏற்பட்டு பசிதாகம் வாட்ட நடக்கச் செயலிழந்து கையிலுள்ள வில் சோர வந்தான். படைகளும் அவனைத் தொடர்ந்தது.

வழியில் வெண்டாமரை பூத்ததோர் அழகிய பொய்கை, தூயர் மனம் போன்று தெளிந்தது; குளிர்ந்த நீரால் இனிதானது. தீயருளம் போன்று ஆழமானது; அறிதற்கரிய இருள் நிறைந்தது அதில் நறவுண்ட மீனினம் துள்ளிப் பாய்ந்தது. அன்பர் மனம் போன்ற நீரொழுக்கு.

மாலைக் கடன்களை முடித்தான் மன்னவன். "இரவு நேரம் ஆனது. நீர் குடிக்க வரும் மிருகங்களுக்காகக் கண்ணிகளைக் கட்டி வையுங்கள் தாங்களாக ஒளிபார்த்து வரும் மிருகங்களைக் கொன்று பிடியும்" எனத் தன் வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அன்று தங்கு வேட்டை, பன்றிகள் அநேகம் நீரருந்த அங்கு வந்தன. அவற்றைக் குத்திச் சாய்த்தனர்.

கதிரவன் எழுந்தான், மிருகங்களைக் காவடிகட்டி எடுத்து வர வீரர்கட்குக் கட்டளையிட்டான். சேனையுடன் பதிநோக்கிப் புறப் பட்டான். வீரர்களுடன் வரும்போது அருளொழுகு கண்களுடன் ஒ ந்தவ முனிவன் அவனெதிரே வந்தான். மாயேகியைக் கண்ட மன்னவன் அவன் திருவடி தொழுதான். பரதேசி அவனை ஆசீர் வதித்தான். "மன்னவனே! நீ சூரிய குலத்தவனுயிருந்தும் மாக மாதமாகிய இக்காலத்தில் வேட்டைக்கு வரலாமோ!" என்றான். (மாகமாதம் என்பது பொதுவாகத் தைமாதம் முதல் பட்சத்தில் வரும் ஏகாதசி முதல் மாசிமாதம் ஏகாதசி முடியவுள்ள காலப் பகுதியாகும்) திலீபதி மன்னன் அவனை வணங்கி, "மாகமாதம் என்ற சொல்லுக்குரிய நல்ல விருத்தாந்தங்களை எனக்குரைப் பாயாக!" என்ருன். "மாகமாதம் பற்றி உனக்குக் கூறுகிறேன். இப்போது நீ என்னுடன் வருவாயாக!" என்று ஆணையிட்டழைத் துச் சென்ருன். ஆங்கொரு பொய்கையில் தானும் நீராடி, மன்னனை யும் நீராடச் செய்தான் மகாமாதம் பற்றிய விருத்தாந்தங்களை எடுத்துரைத்தான்.

மாகமதம் மாயப் பிறவிக்கடலில் விழும் மானிடரை முத்தித் தலத்திற்கிட்டுச் செல்லுந் தோணி. பாவ இருள்நீக்கும் விளக்கு இக்காலத்தில் அதிகாலை கதிரவன் வருமுன் நீராடி நற்செயல்களை மேற் கொள்வாயாக. உயிர்களை வருத்தும் வேட்டைத் தொழிலைத் தவிர் என்றும் "மேற்கொண்டு இம்மாகபலனை உன் குருவான வதிட்டனை அடைந்து தெரிந்து கொள்" என்றும் கூறித் தன்வழி யேகினுன்.

திலீபன் படைகளுடன் தன்னூர் புகுந்து தன்தேவியரிடம் நடந்தது கூறி மாக நீராட்டினுன். தன் குதிரை மீதேறித் தன் குல குரு வதிட்டனை அடைந்தான். வதிட்டன் அவனை ஆசீர் வதித்துப் புகழ் உரைகள் பல கூறினுன். "அரசே, என்னை நாடி வந்தனையே! என்ன காரியம்?" என்று கேட்க தான் வேட்டைக்குச் சென்று அன்று உதயாதி நாழிகையில் சடாமகுடப் பரதேசியைக் கண்ட தையும், மாகபலனை வதிட்டனிடம் கேட்கக் கட்டளையிட்டதையும் கூறினுன்.

வதிட்டன் அதனைக் கேட்டு, காட்டில் மன்னன் கண்ட முனிவ னது பெருமைகளை விவரித்தான். மாகமாத விரதம் மிகச்சிறந்தது. அவ்விரதத்தை அனுட்டித்தவர் பெற்றபலனைக் கூறுகின்றேன். கேள்" என்று தொடர்ந்து பல கதைகளைக் கூறினுன் இறுதியாக

"உலகிலுள்ள நன்மைகள்யாவும் மாகஸ்நான பலனாலேயே ஏற்படுவது ஆகும் மாகநீராடிய பேற்றால் இந்திரனை இந்திராணி பெற்றாள். அதிதி எனும் பெண் தேவர்களுக்குத் தாயானாள். சீதா பிராட்டி இராமனையடைந்தாள் "என்று சுருக்கமாகக் கூறினான்."

'அச்சுதன் அன்பு வேண்டின்
அருவினை துலைக்க வேண்டின்
வச்சிரத் தடக்கை வேந்தன்
வானுல காள வேண்டின்
நிச்சய ஞான மூர்த்தி
நிமலன்பால் ஏக வேண்டின்
நெச்சமுல் பிறவி மாந்தர்
மாகநீ ரிதனில் தோய்வார்,

என்றான். அதன்படி நடந்து திலீபன் சகல சௌபாக்கியங்களும் பெற்றான்.

இப்புராணப் பகுதியில் வேட்டையாடுதல் மன்னர்க்குக் கடனெனினும் அத்தொழில் தவிர்த்து தெய்வவழிபாட்டிலும், விரதங்களிலும் ஈடுபட வேண்டிய காலங்களும் உண்டு, சரியான நேரத்தில் சரியான செயல்களை அறநூல்கள் கூறியபடி செய்து வாழவேண்டும் செய்யுந்தொழில் தெய்வம் என்பர். அத்தொழிலைப் புனிதமாக்குதல் அவசியம். இறைவனால் தரப்பெற்ற பகுத்தறிவே வழிகாட்டும் விளக்கு. இவ்வறிவின் காரணமாக மிருகங்களினின்று வேறுபட்டவன் மனிதன் இவ்வறிவின் துணைகொண்டு நற்செயல்களை ஆலோசித்துத் தேர்ந்தெடுத்து ஆற்றும் உரிமை மனிதனுக்கு உண்டு. இச்செயல்கள் நல்லனவாயின் நற்பலனும் தீயனவாயின் தீயபலனும் வரும். ஆனதால் செயல்களைச் செய்யும் நாமே அதன்பலனுக்கும் பொறுப்பு நம் செயல்கள் இறைவன் செயல் என்று இறைவனைப் பொறுப்பாக்கலாகாது. ஒளிதரும் விளக்கு அதன்கீழிருந்துபிடித்து முன்னேறும், அல்லது கெட்டுப்போகும் சிற்றுயிராம் மனிதன் செயலுக்குப் பொறுப்பன்று. தேர்ந்தெடுத்துப் படிக்கும் நூல்களின் இயல்பினால் தான் ஒருவன் முன்னேறுவான் நூல்களைத் தேர்ந்தெடுத்துப்படிப்பது மனிதன் பொறுப்பன்றோ? தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினையினையே அறுப்பான். "பெருமையும் சிறுமையும் தான்தர வருமே" என்ற முதுமொழிகள் இதற்குச் சான்றாகும். நம்செயல்களை நற்செயல்களாக்கி அதன்

பலனை ஈசனிடம் கொடுத்தால் அவன் அப்பலன்களின் விளைவான பிறவிப்பிணிபினை அறுப்பான் சகல பாவங்களிலிருந்தும் நம்மை விடுவித்து மோட்சம்தருவான்.

திலீபன் மனிதப் பிரதிநிதி. அவனுக்கு நற்செயலை நினைவூட்டி வாய்ப்பளித்தான் மாயோகி, வாய்ப்பினை நழுவவிடாமல் பற்றினன் திலீபன். வேட்டையாடுவது உயிர்க்கொலை. விரதநாட்களில் அதனை விடுத்து மாகஸ்நானமாடி நற்கதைகளைக் கேட்டதால் நற்பயன் பெற்றான்.

'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்'
இது வள்ளுவன் வாய்மொழி:

திருச்சிற்றம்பலம்

---

# நூல் நிறை

## சுடர்மணி மாலை

*17 - வது தொகுப்பு*

**[ தொகுப்பாசிரியர் :** வேம்பத்தூர் கிருஷ்ணன் : **வெளியீடு :** சுடர்மணிப் பதிப்பகம், 19, பஜனைக்கோயில் முதல் தெரு, சூளைமேடு, சென்னை — 600094 ]

சுடர்மணிக் கவிஞர் வேம்பத்தூர் கிருஷ்ணன் 1970 -- ம் ஆண்டு முதல் ஆண்டுக்கொன்றாக—இலவச நன்கொடைத் தொகுப்பாக—சுடர்மணி மாலையை வெளியிட்டு வருகிறார். இம்முறையில் 17-வது சுடர்மணிமாலை 28--12--86 ல் வெளிவந்துள்ளது.

இவ்வெளியீட்டில் விநாயகர், கலைமகள், கோமாதா, சூரியன், அநுமான், சாஸ்த்தா, சிவன், சக்தி, முருகன், திருமால் ஆகியோரது துதிப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மற்றும் இராமேஸ்வரத்தின் வரலாறும் புராணச் செய்திகளும் சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்பெற்றுள்ளன. இவ்வெளியீடு சிறுவர்களுக்கு மட்டுமேயன்றிச் சாமான்யர்களுக்கும் சமய உணர்வை ஊட்டவல்லதாக, அமைந்திருக்கிறது.

# இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

### 1 சாதாரண இருமலுக்கு

படுக்கைக்குப் போகுமுன் கொஞ்சம் மிளகைப் பசும்பாலில் நன்ருகக் காய்ச்சி அத்துடன் பனங்கற்கண்டு போட்டுப் பொறுக்கக் கூடியசூட்டுடன் சாப்பிட்டால் இருமல் குணமாகும்.

### 2 சுளுக்கு, வாய்வு பிடிப்பிற்கு

கால்பலம் மிளகை எடுத்துத் தண்ணீர் விட்டு அம்மியில் வைத்து லேசாக அறைத்து அத்துடன் காலணு எடை கற்பூரம் சேர்த்து நன்ருக அரைத்து வலியுள்ள இடத்தில் உடன்பறறுப் போடச் சுளுக்கு வாய்வு பிடிப்பு குணமாகும்.

### 3 தலைவலிக்கு

இரண்டு கிராம்பை எடுத்து, நன்ருக மை போல் அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டால் தலைவலி சில நிமிஷங்களில் குணம் தரும்.

Dr. N. சடையப்பன் S. M. P.

# அட்ட மூர்த்தம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பாவில் ''வரும் அட்ட மூர்த்தமாம் வாழ்வே'' என்று குறித்துள்ளார். இதற்கு விளக்கமாக

> ''அருகன் மதிவளிவான் யமானன் தீநீர்
> மண்எனும் எண்வகை உறுப்பின் வடிகொண்ட
> ஒருவன்''

எனச் சிதம்பரச் செய்யுட் கோவையில் விளக்கமும் தந்துள்ளார்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம். சூரியன், சந்திரன் இயமானன் என்ற எட்டு வடிவங்களும் இறைவனுக்குரிய அட்ட மூர்த்தமாகும்.

# ஞானமிர்தம்

தொடர்ச்சி

இது, மேல் "பயந்தோன் வினை விடல் வியந்தோ வன்றே" என்று அருளிச் செய்தது எங்ஙனே! என்று சீடன் விண்ணப்பம் செய்யக் கன்மச்சேத உபாயம் கூறியது.

இ - ள் பூருவத்தில் ஓர் ஆன்மாவானவன் செய்ய வந்து பந்தித்த புண்ணிய பாவங்களை மூன்று தானத்தால் புசிக்கவேண்டு மென்று வேதங்கள் சொல்லா நின்றன; அந்த மூன்றுமாவன கருப் பாசயம் என்னும் அந்தகாரம் நிரம்பிய காராகிருகத்தினிடத்தில் வரும் வேதனையும் அந்த இருட்டறையாகிய காராகிருகத்தின் சிறிய துவாரத்தை மகத்தாகிய சிரமத்தோடு அரிதாக நீங்கிச் சரீரம் எடுத்துப் பின்பு நிலம் தலைப்பட்டு வந்து விழும் அளவில் வரும் வேதனையும் இந்திரியங்கள் யாவும் நிலைகலங்க அலந்தலைப்பட்டுத் தேகம் விடும் பொழுதில் வரும் வேதனையும் சொல்லப்பட்ட இம் மூவகையினும் அனுபவிக்கும்பொழுது ஓர்ஏது முன்னிலையாக வல்லது புசிக்கும் உபாயம் இல்லை. அந்த ஏதுத்தான் சைதந்நிய ஏது வாதல் அசேதன ஏதுவாதல் அல்லது கூடாது, மிகவும் அறிவிலி யாதலாலே சைதந்நிய ஏதுவாக வந்த சுகத்துக்குப் பிரியப்படவும் துக்கமாகிய வேதனைத்திற்குப் பிறரைக் கன்றிக் களலவும் அது நிச்சயமாகச் செலுத்தும்.

ஒருசொல் வருவித்துக் கொள்க.

அசேதன ஏதுவாக இடைவிடாதே துக்கம் மிகவுண்டாயினும் கிட்டுதற்கரிதாகிய சுகம் தந்நிக்கவொண்ணாதபடி உண்டாயினும் பூருவ வினைக்கு ஈடாக வந்த இந்தச் சுகத்துக்கும் துக்கத்துக்கும் பிரியாப்பிரியங் கொள்ள என்ன இருக்கிறதென்று உள்ளத்தில் அறிவை யொழியாராய் அங்ஙனம் சைதந்நிய ஏதுவாக வந்த வற்றையும் இப்படியே காண்டல் மகத்தான பரமானந்த போக மாகிய மூலபண்டாரப் பொருள் என்று சொல்லுவர் தவத்துக்குக் கர்த்தராகிய ஞானவான்கள் எ - று.

தொல்லைக்கு அல்லல் என்னை கொல் என்றும்; சேதனத்து இயைதல் நிதி யென்ப இறைவர் என்றும் இயையும், மற்று, ஏ கொல், அசை.

து. வி: சைதந்நிய ஏது - அறிவால் வரும் காரணம், அசேதன ஏது - அறிவின்மையால் வரும் காரணம், பாரணம் - உண்ணல் ஈண்டுத் துய்த்தல்.

35 பனுவ லாட்டி தனிமனைக் கிழவர்
நட்பும் பகையும் மெய்ப்பட நாடின்
யாவது மில்லைத் தானே ஆயினும்
ஆய்விடை யுடையது உளதே அஃதே
ஈன்றோர் பகைஞர் கீண்டோர் நட்பே
அருஞ்சிறை இடுநரின் இருஞ்சிறை விடுநரின்
யார்கொல் உறுதி யோரே கீறி
உடற்சிறை தவிர்த்த நலத்தகை யாளர்
கொடுத்தது நிலமிசை இவர்க்கே துயக்குளனை ?
உருவில் ஒருயிர்க்கு உடலுநர் உழையர்என்று
இருவே றுரைப்பதை எவனோ? தெரிதரின்
கோடை தூற்றக் கூடிய ஆழிலை
வாடையின் வீற்றுவீற் றாகி யாங்குச்
செய்தியின் திரண்டு கையற ஒரீஇயர்
ஒக்கல் அல்லதை மற்றும் கேண்மதி
தன்னணி ஆகமும் அஃதெனின்
என்னை யோ?பிற பன்னுங் காலே.

இது, மாதவத் திறைவர் மாமுது நிதியாகிய கன்மச்சேத உபாயம் உடையார்க்கு நட்பும் பகையும் இல்லை என்று ஞான சித்தாந்த வரிட்டம் கூறியது

இ - ள் கலைமகளை நாவாகிய ஒப்பற்ற வீட்டிலே குடியேற்றி வைத்த ஞானவான்களுக்கு மெய்யாக விசாரிக்கில் மித்துருக்களும் சத்துருக்களு மென்று ஒருத்தரும் இல்லை ஆனாலும் விசாரிக்கு மிடத்து இவர் உடையது எனற்கு ஒன்று சிறியது உண்டா தலுமாம் அஃது யாதென்னில் இவரைப் பயந்த மாதாபிதாக்கள் சத்துருக்களும் இவர் உடலைப் பிளந்தோர் மித்துருக்களு மாயிருப் பர், அஃது என்னென்னில் நீங்குதற்கரிய சிறையிலே இட்டோரி லும் அப்பெரிய சிறையினின்றும் மீட்டோரினும் யாரை மித்துரு வாகக் கொள்வோம்? இத்தேகத்தைப் பிளர்நு தேகமாகிய சிறை வாசத்தை யொழித்த நல்ல அழகையுடையோ ராகிய ஆசாரியர்

இந்த ஞானவான்களுக்குக் கொடுத்தது கிலங்கட்கு மேலாகிய முத்தி யன்றோ அதற்காகத் துக்கப்படுவது என்னை ? அருவமாயுள்ள ஓர் ஆன்மாவுக்குச் சத்துருவும் மித்துருவும் என்று இரண்டு வேறு பாடாகச் சொல்லவேண்டுவானேன்! விசாரிக்கில் மேற்காற்று அடிக்கத் திரண்ட சருகிலை வாடைக்காற்றால் சிதறினவாறு போல பக்குவப்பட்ட கன்மபலத்தைப் புசித்தற்கு உற்ற காலத்து வேண்டுவாராகத் திரண்டு கூடிப்புசித்து அக்கன்மபலம் அற்ற காலத்துப் பிரிந்து போனவர்கள் சுற்றத்தாரே யன்றோ? அல்லதூஉம் இன்னமும் கேட்பாயாக. சொல்லுமிடத்து தன்னுடைய அழகிய தேகமும் கன்மபலம் புசித்தற் கேதுவாகக் கூடினதே யாகலான் வேறு சிலரைச் சத்துருவும் மித்துருவும் என்று சொல்லவேண்டுவது என்னை எ - று

தான், ஏ, ஓ, மதி — அசை. ஓரீஇயர் - வினைப்பெயர்.

து. வி: வரிட்டம் — சிறப்பு.

## ஞானவுபாயம் அறியாதாரின் தாழ்வு

36 தொல்லை ஞாலத்து எல்லை நீங்கிய
இருவகைத் தோற்றத்து ஒருவா உயிர்கட்கு
இருவினை ஒருவ மருவின்று ஆயிடை
நொதுமலர் கவிகை நொதுமலர்க் கவிகை
விதிமுறை மதிமலர்பு எய்திக் கதுமென
யாமுடைத்து அவருடைத் தாம் மன்என்று இனிது
ஆம்முறை யறியார் மாமதி பிறழ்ந்து
செயலறு பறியார் மயல்உற் றோரே
அளியரோ அளியர் தாமே தெளியா
இளையோன் துரந்த குணில்வாய்ச் செல்லாது
இளையோற் சினவும் வளைவாய் ஞமலியின்
அளியரோ அளியர் என்னை
ஒளிகொள் காரணம் உன்னு தோரே.

இது, மேல், "ஒருவன் தொடுத்த இருவினையால்!" "தன்னை யாகவும் அஃதெனல்" குறித்துச் செயலறுதி யானமையின் ஞான வுபாயம் அறியாதாரைத் தாழ்த்திக் கூறியது.

இ - ள் பழையதாய் வருகின்ற பிரபஞ்சத்திலே தாவரசங்கமமான இருவகைத் தோற்றத்தையும் வடாத அளவிறந்த ஆன்மாக்கட்குப் புண்ணியபாவ பலம் ஒருவப் புரிக்கவருவது இல்லையாகியவிடத்து பிறர் தமக்குச் செய்த நன்மையும் பிறர்க்குத் தாம்செய்த நன்மையும் அறிவை விரித்துப் பார்த்து ஊழ் முறையென்று புத்திபண்ணி விரைவாக நம்முடையது - அவர் தந்தார் என்றும் அவருடையது நாம் கொடுத்தோம் என்றும் இனிதாக ஆகிற முறைமையை அறியாராய் மகத்தாகிய அறிவு கெட்டு மயக்கத்திலே பொருந்தினோர் ஆதலால் பிரபஞ்சத்திலே ஒருவர்க்கொருவர் செய்யும் சுகதுக்கம் இல்லாமை அறியாதார் அறிவில்லார் அறிவில்லார். அறிவில்லாத பாலன் ஒருத்தன் எறிந்த குறுந்தடியிடத்துச் செல்லாது எறிந்த காரணத்தவனை அப்பாலனைக் கறுவி வெகுளும் வளைந்த வாயையுடைய நாய்க்குள்ள அறிவுதானும் இல்லாமையின் அறிவில்லாதவர் அளிக்கத் தக்கார் என்னையெனில் விசாரித்தவிடத்து மறைதலையின்றிப் பிரகாசித்தலைக் கொண்ட பூருவ கன்ம பலமாகிய காரணத்தை நினைத்தறியாதாராதலான் எ - று.

அடுக்கு இழித்தற்பொருட்டு. மன்னும் ஓவும் அசை, ஏகாரம் - தேற்றம்.

நு வி ; தாவரம் - நிலைத்திணை; சங்கமம் - இயங்குதிணை ஒருவ - நீங்க, அடுக்கு: அளியரோ அளியர் என ஈரிடத்தும் வந்த அடுக்கு.

## ஞானசித்தாந்தவரிட்டப் பிரமாணம்

37 அயில்அரி அரலை விழுப்புண் எரிபழுத்து
அனல்கால் கோலின் பன்முறை அடினும்
பேரிடர் நீத்த பெருந்தகை யோன்என்று
ஆர்வ நெஞ்சம் அல்லது யாரே
வேரங் கொண்டோர் வேறுரு மாறுள்முந்து
உடம்பிடி உடல்துணிப் படுப்பினும் விரையொடு
மலைய சந்தும் வழுத்துங் கொண்டு
தலையிற் பூதந் தாங்கினும் உலையாப்
பிறவிப் பிணிதணி அறவணர் இவர்என
வினையா இன்பம் விளையின் அல்லது
உளைவதை உடையரோ விளைவுணர்ந் தோரே.

இது "தொல்லைக்கு என்னைக்கொல் அல்லல் என்னும் உள்ளத் துணர்ச்சியான் அசேதனஏது வன்றிச் சேதனஏதுவிலும் வரும் துக்கத்தைப் பார்த்துச் செற்றமும் சிநேகமும் கொள்ளாது ஒழிவதும் உண்டு என்று ஞானசித்தாந்த வரிட்டம் பிரமாண சாதகத்தால் சொல்லியது.

இ-ள் சத்திரத்தாலே அரியத் தகுந்த வருத்தத்தைச் செய்யும் பெரியபுண்ணை நெருப்புப் பழுத்தாற் போலக் காய்ந்து அக்கினியைக் காலுகின்ற கோலாலே பலகாற் சுடினும் இப்படிச் சுட்ட வைத்தியனை "என் மிக்க துக்கத்தைக் கெடுத்த பெருந் தகைமையுடையோன்" என்று உள்ளத்தில் சிநேகங்கொள்ளுவதல்லது அவன்மீது செற்றங்கொண்டார் உண்டோ? இவனின் வேறோ! தேகமாகிய கிரந்தியைச் சேதித்தவன்? எதிரியாய் வந்து வாள்கொண்டு தேகத்தை இருதுணியாக்கிவிடினும் புட்பம் முதலிய வாசனைத் திரவியங்களோடு மலையிலுண்டாகிய சந்தனத்தைச் சாத்தித் தோத்திரித்து தலையிற் பாதம் பொருந்த வணங்கினும் இவர் பிராரத்த கன்மம் தொலைத்தற் கேதுவானோர் ஆதலால் கெடாத பிறவித் துக்கத்தை ஒழித்த தருமவான்கள் இவர்கள் என்று பெறுதற்கரிதாகிய பிரியத்தை இவர்களிடத்துக் கொள்வதல்லது செற்றங் கொள்ளுவதை உடையர் ஆவரோ! மேல் வருவது முத்தி யென்று உணர்ந்தோர் எ-று.

ஏ, அசை, ஓகாரம் இரண்டும் எதிர்மறை.

நு. வி: சத்திரம் - வாள், கத்தி.

உயிர்களின் வினைக்கேற்ப இறைவன் நலந்தீங்குகளை அளிப்பன். அவ்வாறு அளிக்கும் நிலையில் நன்மை வழங்கின் உயிர்கள் அவலம் உறுவதில்லை. தீமை வழங்கப்பெறின் உயிர்கள் அவலம் உறுகின்றன. அச்செயல் இறைவனின் கருணைக்கு மாறாயது என்றும் கருதுகின்றன. ஆனால் உண்மையில் அதுவும் இறைவனின் கருணையேயாகும். இதனை விளக்க மருத்துவரின் செயல், தாய் தந்தையைத் தம் இன் புதல்வரைத் திருத்தும் செயல், அரசன் தன் ஆணைவழி நில்லாதோரை மீண்டும் நிலைநிறுத்துதற்கு எடுக்கும் செயல் ஆகிய மூன்றையும் ஞானநூல்கள் எடுத்துக்கூறும். அவற்றுள் மருத்துவரின் செயலை இவ்வாசிரியர் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

மண்ணுளே சிலவியாதி மருத்துவன் அருத்தியோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித் தீர்த்திடும்
கண்ணிய கட்டிபாலுங் கலந்துடன் கொடுத்துத்தீர்ப்பன்
அண்ணலும் இன்பதுன்பம் அருத்தியே வினைஅறுப்பன்

எனக் சிவஞான சித்தியார் கூறுவதும் நினைவு கூர்தற்குரியதாம். தேகமாகிய கிரந்தி — உடலாகிய முடிச்சு.

## ஞானசித்தர் வரிட்டம்

38 பையுள் நீங்கப் பயன்பல பெருக்கக்
கைதூ வாத செய்தி யோர்க்கும்
பருவரல் வருவது துருவம் அல்லதை
வருவது நன்னயம் மற்றே அறிவழிந்து
அவல மாக்கடல் அழுந்தல் செயல்இல்என்று
ஆசற வுணர்ந்த தீதி லாளர்
மான்மதம் பளிதம் வார்நறுஞ் சாந்தம்
தாள்முதற் பழிச்சுநர் தைவந் திடினும்
செவிசுடூஉத் தகைய மொழியல பயிற்றி
மயிரின் தகைத்து வறுத்துஎரித் திடிப்பினும்
ஞான மாத்துலே சீர்புகுத்து ஆநாம்
முனைப்பாற் செய்தி நகைப்பாற் பட்டென
மூரல் முறுவல் அல்லதை தேரின்
உவகைக் கலுழ்ச்சியோ இலரே இவரே
உரையிடை மறந்தனென் மாதோ உவகை
இவர்க்குஇடர் இலம்என மனக்கினி யோரே
கலுழ்ச்சி தீங்கு செய்தியோர் நீங்கா
நிரயத்து அழுந்துதற்கு ஏது வாயினம்
என்வே அழிந்த நெஞ்சமொடு இனைபாங்கு
ஆனர் பெயர்த்தும்ஒன்று அயர்த்தனென் யானே
தொடுத்த வெவ்வினை எவ்வளவு உடைத்தெனக்
கையற்று இன்னல் எய்தலும் உரியர்
அன்றே வீடுஇதன் ஊங்குமற்று
என்னே நாடருங் கேள்விநெடி யோர்க்கே.

இது வினைவுணர்ந்தோர் செயல்அறுதியாலே யாவை யாவரால் தமக்கு வரும் நன்மைதீமைகள் அவையிற்றை ஊழால் வருவன

என்று அறிந்து பிரியாப்பிரியம் கொள்ளாதொழியும் ஞானசித்தர் வரிட்டம் கூறியது.

இ - ள் வறுமைத் துன்பம் நீங்குதற்காகப் பல பிரயோசனங்களும் உண்டாகவேண்டும் என்று கையொழியாத முயற்சியுடையோர்க்கும் மிடியாகிய துன்பமே வருவது ஊழ்முறைமையானைல் நல்லஇன்பம் வருவதும் அந்த ஊழானல்லது வேறென்றுலாமோ! அறிவுகெட்டுப் பெரிய துக்கமாகிய சாகரத்தில் அழுந்தாதே கொள். முன்செய்த கருமம் அல்லது ஒருவர்க்கொருவர் செயல் இல்லையென்று குற்றமற அறிந்த நல்லோர் கத்தூரியும் கற்பூரமும் கொழுவிதாய நறுநாற்றத்தையுடைய சந்தனக்குழம்பும் பாதாதி கேசம் வரைத் தோத்திரம் பண்ணினராகிச் சாத்தினுலும் செவியிலே நாராசத்தைக் காய்ச்சி ஏற்றினற் போன்ற இகழ்ச்சி வசனங்கள் பல சொல்லி மயிர்போல நுண்ணிதாக அரிந்து நெருப்பிலேயிட்டுச் சுட்டுப் பொரித்து அரிந்தபுண்ணிலே வேல்கொண்டு குத்தினுலும் இவ்விரண்டும் ஒக்க ஞானம் என்னும் மகத்தாகிய தராசிலே சீர்தூக்கி என்னே என்னே! நாம் முற்பவத்திற் செய்த கன்மபலம் இப்பொழுது சிரிக்கும் பகுதியாயது என்று சிறுமுறுவல் கொள்ளும தல்லது ஆராயுமிடத்து பிரியாப்பிரியம் கொள்ளுவதிலர் ஆயினும் சொல்லுமிடத்தே நான்கூற மறந்தன சிலவுள. இவர்க்குப் பிரியமாவது இவ்விரண்டுக்கும் விருப்பு வெறுப்பாகிய வினைமில்லோம் என மனக்களிப்பையுடையோராதலும் இவர்க்குத் துக்கமாவது நமக்குவிதனம் பண்ணினேர் பின்னளில் ஒழியாத நரகத்தில் அழுந்துதற்கு ஏதுவாயிருந்தோம் என்னும் இத்தால் அழிந்த மனத்தோடே துயருடையராதலும். இவர் உரியர். மற்றும் யான் ஒருபொருளைக் கூறமறந்தேன். அஃதாவது பந்திக்கப்பட்ட வெவ்விதாகிய பிராரத்த கன்மம் இன்னும் எவ்வளவு காலம் உடையதோ என்று மனமழிந்து துக்கப்படுதலும் உரியர் ஆதலால் ஐயோ அறிதற்கரிதாகிய முத்தியுபாயவிசாரத்தால் உயர்ந்தோர்க்கு இவ்வனுபோகத்தின் மேற்பட்ட முத்திநெறி மற்றுயாதோ? எ - று

ஏகாரம் தேற்றம், ஓகாரம் முன்னது எதிர்மறை, ஓ ஏ மாது ஆங்கு அசை.

நு. வி: சாகரம் - கடல் பாதாதிகேசம்வரை - அடிமுதல்முடிவரை. நாராசம் - இரும்புக்கம்பி. பிரியாப்பிரியம் - விருப்பும் வெறுப்பும்

39 நஞ்சுஇனிது அருத்தினும் நல்வினை மாட்சி
வஞ்சம்இல் லோர்க்கு அமிழ்தா கற்றே
நஞ்சு அமல்அயினி நாகம் உயர்த்தோன்
வெஞ்சின வீமன் வீடிட வருத்தி
நாகம் நூக்க நாகரும் பெறுஅ
ஆரமிழ் தன்றி அணங்குகொடு நடந்த
பேரிசை யோனே பாரதம் இசைக்கும்
அன்னோன் அவ்வை அருமுனி பணியிற்
கன்னனைப் பயந்து நன்னதி யியக்க
அங்கர் கோனாய் அரசுதலை பணித்துப்
பொங்குதிரை யாடப் புரவுப் பூண்டிசினே.

இது "முனைப்பாற் செய்தி" ஊழ்வலியால் நல்வினை நிகழுங் காலத்து வந்த தீமையும் நன்மையாம் என்று சொல்லியது.

இ - ள் நல்வினை மாட்சிமைப்படுதலால் அழிவில்லாதோர்க்கு நஞ்சை இனிதாகப் புசிப்பிக்கினும் அமிழ்தாகின்ற அத்தன்மை யாகவே முடியும் அஃது எவ்வாறு என்னில் ! வெவ்விய சினத்தை யுடைய வீமன் மரிக்க வேண்டும்என்று நாகத்தைக் கொடியிலே எழுதிஉயர்த்திய துரியோதனன் நஞ்சுகலந்து சோற்றைப் புசிப் பித்து நாகலோகமாகிய பாதாள லோகத்திலே செல்லத் தள்ள நாகலோகத்திலுள்ள தேவரும் பெறுதற்கரிதாகிய நிறைந்த அமுதத்தைப் புசித்ததுவேயின்றி அவர் விவாக பூருவமாகக் கொடுத்த நாககன்னியையும் பாணிக்கிரகணம் பண்ணிக் கொண்டு வந்த பெரிய கீர்த்திமானானன் இது மகாபாரதத்திலே சொல்லியிருக் கிறது காண். அத்தன்மையனான வீமன் மாதரவாகிய குந்திதேவி அரிய தவத்தையுடைய துருவாசமாமுனிகள் பிரசாதித்த மந்திரத் தாலே கன்னனைப் பெற்று வரநதியாகிய கங்கையாற்றிலே மிதவற் பேழையிலே வைத்துச் செல்லவிடத் துரியோதனனுக்குத் தோழனாய் அங்கதேசம் என்னும் இராச்சியத்துக்குக் கர்த்தாவாய் அங்க ரான் என்று மகுடாபிஷேகம் பண்ணப்பட்டு பகையரசர் தன் பாதத்தில் வீழ்ந்து திறை செலுத்தப்பண்ணி பெரிய சமுத்திரம் சூழ்ந்த வையகத்துக்கு உபகாரியென்னும் பெயரைப் பூண்டனன் எ - று

ஆயுள் சந்தா செலுத்தினால்

**ஓர் அன்பளிப்பு**

20353

ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு
ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினால்
ரூ. 55 மதிப்புள்ள

**கந்தர் கலிவெண்பா**

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக
அளிக்கப்பெறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா
பிரபல இசையறிஞர் சேலம்
டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத்
தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ. 25-ம்
அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி
இசைத்தட்டைப் பெறலாம்.

நி-ஆ-ர்.

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

# ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | ரூ 125-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ 225-00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | ரூ 10-00 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரூ. 13-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ 15-00 |

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். ''ஸ்ரீகுமர குருபரர்'
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் முத்து. மெய்கண்டதேவன்,
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

**Posted at Sub-Post Office at Tirupanandal**
612604

Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை — 600 090.